விலை ரூபா: 8.00
*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி
*Valampurii*

பக்கங்கள்:- பத்து

ஙங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 புரட்டாதி 11 செவ்வாய்க்கிழமை (27.09.2005) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 282

ராம்கோ
MADRAS CEMENTS LTD
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
RAMCO CEMENT
சீமெந்து

## தியாகி திலீபனின் 18ஆம் ஆண்டு நினைவு நாள் தாயகமெங்கும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

இந்திய இராணுவத்தை வெளியேற்றக் கோரி உண்ணாவிரதம் இருந்து உயிர்த் தியாகம் செய்த லெப்டினன் கேணல் திலீபனின் 18ஆவது ஆண்டு நினைவுதினம் நேற்று தமிழர் தாயகப்பகுதியெங்கும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் திலீபன் உண்ணாவிரதத்தை மேற்கொண்ட நல்லூர் கந்தசுவாமி ஆலய வடக்கு வீதியில் பிரதான நிகழ்வுகள் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் செல்வக்குமார் தலைமையில் இடம் பெற்றது.

நேற்றுக்காலை 9.30மணிக்கு யாழ்.பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள தியாகி திலீபனின் நினைவாலயத்தில் அஞ்சலி நிகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டதை அடுத்து தியாகி திலீபனின் உருவப்படம் அங்கிருந்து ஊர்வலமாக அணிவகுப்பு மரியாதையுடன் உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்ட இடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு நிகழ்வுகள் தொடர்ந்து இடம் பெற்றன.

இந்நிகழ்வில் பொதுச்சுடரினை மௌலவி மொஹமடீன் பிச்சை, அருட்பணி கலாநிதி ஜெயசேகரம் அடிகளார், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா, கூட்டுறவுச் சங்கத்தலைவர் கனகசபாபதி ஆகியோர் ஏற்றினர்.

இதனைத் தொடர்ந்து தமிழீழத் தேசியக் கொடியினை மாவீரர் (10 ஆம் பக்கம் பார்க்க)

## பொங்கு தமிழுக்கு ஆதரவாக மாணவர்கள் சைக்கிள் ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

பொங்குதமிழ் நிகழ்விற்கு ஆதரவு தெரிவித்து வடமராட்சி உயர்தர வகுப்பு மாணவர்கள் சைக்கிள் பேரணி ஒன்றை மேற்கொண்டனர். நேற்றுக்காலை 9மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் ஒன்று கூடிய மாணவர்கள் அங்கிருந்து வல்வெட்டித்துறை சந்தியூடாக உடுப்பிட்டியைச் சென்றடைந்து பருத்தித்துறை ஊடாக மீண்டும் நெல்லியடியை வந்தடைந்தனர்.

ஊர்வலத்தின் போது பொங்குதமிழ்ப் பானை மற்றும் சிவப்பு ,மஞ்சள் கொடிகள் என்பவற்றை தாங்கியிருந்தனர். சுமார் நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் இவ் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். (ச-19,35,43)

# போரை ஆரம்பிக்கக் கோரும் ஜே.வி.பி. ஆயுதம் ஏந்திப் போராட வருவார்களா ?

## கேள்வி எழுப்புகிறார் ஹரிகுணத்திலக

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தை கலைத்துவிட வேண்டுமென ஜே.வி.பி. யின்தலைவர் வெளியிட்ட கருத்தை முன்னாள் விமானப்படைத்தளபதி கண்டித்துள்ளார். இராணுவத்தைக் கலைத்துவிட வேண்டுமென புதுமையான ஒரு கதையைப்பேசும் சோமவன்ச யுத்தமுனையில் ஆயுதம் ஏந்திப்போராட முன்வருவாரா என அவர் கேள்வி எழுப்பினார்.

யுத்தத்தை தவிர்த்து பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார். (10 ஆம் பக்கம் பார்க்க)



தியாக தீபம் லெப். கேணல் திலீபன் மற்றும் கேணல் சங்கர் ஆகியோரின் திருவுருவப்படங்களுக்கு தேசியத்தலைவர் வே.பிரபாகரன் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

விசேடமாக அமைக்கப்பட்ட இடத்தில் நடைபெற்ற இவ் அஞ்சலி நிகழ்வில் பொறுப்பாளர்கள் ,போராளிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## கொழும்பில் பாதுகாப்புக்கென மூவாயிரம் படையினர் தயார்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கல் செய்யப்படும் ஒக்டோபர் மாதம் 7 ஆம் திகதியன்று கொழும்பு நகரின் பாதுகாப்பிற்கென முப்படை மற்றும் பொலிஸைச் சேர்ந்த சுமார் மூவாயிரம் பேரை ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக முக்கிய பொலிஸ் அதிகாரி சிறிசேன ஹேரத் தெரிவித்தார்.

தேர்தல் நடைபெறும் நவம்பர் மாதம் 17 ஆம் திகதி இந்தப் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடருமென்று அவர் கூறினார். வேட்பு மனுத்தாக்கல் செய்யப்படும் நாளன்று கொழும்பில் ரோந்துப் பிரிவினரை சேவையில் ஈடுபடுத்துவதற்கும் அன்றைய தினம் கொழும்பிற்கு வரும் முக்கிய நபர்களின் பாதுகாப்பிற்கென விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வேட்பு மனுத்தாக்கல் செய்யப்படும் தினத் தன்று வன்முறைகள் ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ச)

## மூன்று பொலிஸாரும் இன்று தமிழீழ நீதிமன்றில் ஆஜர்

தமிழீழ நீதிமன்ற விளக்க மறியலில் உள்ள மூன்று பொலிஸாரும் இன்று காலை 9மணிக்கு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்

தமிழீழ நிர்வாகப் பகுதியான மன்னாரில் அனுமதியின்றி நுழைந்தாக மூன்று பொலிஸார் விடுதலைப்புலிகளால் கைது செய்யப்பட்டனர். தமிழீழ காவல் துறையிடம் ஒப்படைக்கப்பட்ட மூவரும் கிளிநொச்சி தமிழீழ நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டு செப்ரெம்பர் 27 ஆம் திகதிவரை நீதி மன்ற விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர். விளக்கமறியல் இன்று முடிவடைவதை அடுத்து நீதிமன்றில் ஆஜர் படுத்தப்படவுள்ளனர். (ச-8)




## கைதிகளை ஏற்றிச்சென்ற வாகனம் மீது கம்பஹாவில் நேற்று துப்பாக்கிச்சூடு

### சிறைக்காவலர்கள் மூவர் உட்பட நால்வர் பலி

(கொழும்பு)

சிறைச்சாலை கைதிகளை ஏற்றிச்சென்ற பஸ் மீது இனந்தெரியாதோர் வழிமறித்து துப்பாக்கியால் சுட்டத்தில் நால்வர் பலியாகினர். மூவர் படுகாயமடைந்து கம்பஹா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நீர்கொழும்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகள் சிலரை கம்பஹா நீதிமன்றத்தில் ஆஜர்செய்து விட்டு சிறைச்சாலைக்கு திரும்பிக்கொண்டிருந்த வேளை கம்பஹா (10 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 077-2349999,
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com,reservations@expoavi.com.
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள் ஊர் விமான சேவை...

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# உங்களுக்கு அறிவும் கண்களுக்கு ஒளியும்

## கண் நோய்கள் பற்றிய கேள்வி–பதில்கள்

**கண் அறுவைச் சிகிச்சை மருத்துவர் ரெஜி சீமன்**

45வயதுடைய ஆசிரியர்:- *நான் வாசிப்பதற்கு கண்ணாடி பாவிக்க ஆரம்பித்தது நாற்பது வயதில். என் மனைவி எனது கண்ணாடியைப் பாவித்து வாசிக்கின்றார். ஆனால் அவரின் வயது 35. அவருக்கு எனக்கு முன்பே கண்ணாடி பாவிக்க நேரிட்டது. ஏன்?*

மருத்துவர்: சாதாரணமாக 38-40 வயதிலிருந்து புத்தகம வாசிக்க, தைக்க கண்ணாடி பாவக்க நேரிடுகிறது. இதனாலே இதற்கு நாற்பதில் குருடு என் பார்கள். உமது மனைவிக்கு சிலவேளை வயது பிழையாக இருக்கலாம். ஏனெனில் பெண்கள் வயதை சொல்ல விரும்பான்மையால் ஆகும். ஆனாலும் சிலருக்கு 38 வயதிலிருந்தே புத்தகம வாசிக்க கண்ணாடி தேவைப்படுகின்றது. இது ஒரு சாதாரண விஷயம்.

நீரிழிவு நோயுள்ள ஒருவர்: *கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் எனக்கு நீரிழிவு நோய் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டது. பின்னர் நான் இந்நோய்க்கு சிகிச்சை பெற்றேன். இதன் பின்னர் கண்பார்வை குறைந்துவிட்டது. இப்படி குறைவு ஏற்பட்டது எனக்கு பிழையான மருந்து ஏதும் கொடுக்கப்பட்டதனாலா?*

மருத்துவர்:- இல்லை நீரிழிவுக்கு கொடுக்கும் மருந்தினால் இரத்தத்தில் சீனி குறைக்கப்படுகின்றது. சீனி குறைந்து கூடும் பொழுது கண்வில்லையின் உருவம் வேறுபடுகின்றது. அப்பொழுது பார்வையும் வேறுபடுகின்றது. இரத்தத்தில் சீனியின் அளவு சாதாரண நிலைக்கு திரும்பிய பின் கண்ணாடி பாவித்து பார்வையை அடைய முடியும்.

45 வயதுடைய ஒரு நபர்:- *எனது தாயார் 69 வயதானவர். அவர் 10வருடங்களாக நீரிழிவு நோயுடையவர். ஒரு கால் வெட்டி நீக்கப்பட்டுள்ளது. இப்பொழுது எனது தாயாருக்கு எதையும் புரிந்துகொள்ளக் கூடிய அளவு பார்வையில்லை.*

மருத்துவர்:- நீரிழிவு நோயினால் காலப்போக்கில் கண்களில பலவிதமான வித்தியாசங்கள் ஏற்படுகின்றன. சாதாரணமாக இது ஏற்படுவது நீரிழிவு நோய் ஏற்பட்டு ஐந்து வருடங்களின் பின்னரே. கண்களின் பின் பகுதியில் பார்வையைப் பெற்றுக் கொடுக்கும் திரை போன்ற பகுதி இருக்கின்றது. நீரிழிவு நோயால் இந்தப் பகுதியில் இரத்தோட்டம், நிணநீர் சேருதல் ஆகியன ஏற்படுகின்றது. அப்பொழுது ஒரேயடியாக பார்வை குறைவடைகின்றது. சிலர் இப்படியான நேரங்களில் முற்றாகவும் குருடாகின்றனர். அதனாலேயே நீரிழிவு நோயாளிகளுககு குறைந்தது 6 மாதத்திற்கு ஒருமுறை கண் பரிசோதனை செய்யும்படி கூறுகின்றோம். இப்படி மாற்றம் ஏற்படும் போது லேசர் கதிர் சிகிச்சை செய்வது ஒரேயொரு வழிமுறையாகும். இதனால் இழந்துபோன பார்வையைத் திரும்பவும் பெற முடியாது. ஆனாலும் இருக்கும் பார்வையை இழந்துவிடாமல் பாதுகாக்க முடியும். மேலும் நீரிழிவு நோயாளியின் கண்ணில் வெள்ளப்படலம் , சாதாரணமானவர்களை விட விரைவாக ஏற்படுகின்றது. இதைத் தவிர்க்க முடியாது. படலத்தை வெட்டி நீக்கி, கண்ணற்கு லென்ஸ்(Lens) போட்டு திரும்பவும் பார்வையடைய முடியும்.

50வயதான ஒரு நபர்:- *இரணடு நாட்களுக்கு முன்பாக எனது ஒரு கண் பார்வை இல்லாமல் போனது. கண்ணை துடைத்துப் பார்த்தேன் ஆனாலும் தெரியவில்லை. ஒரேயடியாக இப்படி ஏற்பட்டது ஏன்?*

மருத்துவர்:- இப்படி ஏற்பட அநேக காரணங்கள் உண்டு. கண்ணிற்கு இரத்தம் கொண்டு செல்லும் நரம்புகள் முழுமையாக மூடப்பட்டிருக்கலாம். கண்ணிலிருந்து வெளிய இரத்தம் கொண்டு செல்லும் நாளங்களும் மூடப்பட்டிருக்கலாம். கண்ணிற்குள் இருக்கும் விழித்திரை சில சமயம் கழன்றிருக்கலாம். இதற்கு கண் விசேஷ வைத்திய நிபுணர் கண்ணை பரிசோதனை செய்ய வேண்டும்.

35 வயதுடைய ஆசிரியை:- *எனது தகப்பனுக்கு க்லோகோமா எனும் நோய் காரணமாக மருத்துவம் செய்யப்பட்டது. சிலர் இந்த நோய் பரம்பரையாக வருவதென்று சொல்லுகிறார்கள். அதனால் இந்த நோயானது எனக்கும் வருவதற்கு இடமிருக்கின்றதா?*

மருத்துவர்:- க்லோகோமா எனப்படும் நோய் கண்ணில் பிரசர் கூடுவதனாலாகும். ஆனாலும் க்லோகோமா இரண்டு வகையுண்டு. ஒவ்வொன்றும் வித்தியாசமானது.

I. கண்பார்வை குறைவு உடனே வெளிப்படாது. ஆனாலும் ஒரு திசையைப் பார்க்கும் போது சுற்றியுள்ளவைகள் தெரிந்து. அறியாமலே குறைந்துவிடும். கண்ணில் வேதனையும் சிவப்பாகுதல், தலையிடி போன்ற எந்த வருத்தமும் ஏற்படாது. இது பார்வையைப் படிப்படியாகக் குறைவடையச் செய்யும் நோய்.

(தொடரும்)


## சிறு விளம்பரம்

### திருத்துதல்

மூக்குக்கண்ணாடி ஒட்டுதல் சகல வித கெமராக்கள் எலக் ரோணி பிளாஸ்கள் திருத்துதல் உதாரணமாக ஜெனரேட்டர் வாட்டர்பம் போன்றவற்றின் பாட்ஸ் கையடகமாக உள்ள பிளாஸ்டிக் பொருள் உடைவு ஒட்டுதல போன்றவை விஷேசமாக செய்யபபடும் ரகு போட்டோ டெக்னிக் 301-கஸ் தூரியார் வீதி யாழ்ப்பாணம். கன்னாதிட்டி சந்தி சமீபமாக இடம் மேல் மாடி தொடர்பு சு.நாராயணசாமி.

(9916)


## விண்ணப்பம் கோரல்

இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக் குழுவினால் வழங்கப்படும் அமெச்சூர் வானொலி இயக்குநர்களின் திறமைச் சான்றிதழ்களுக்கான பரீட்சைக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

அமெச்சூர் வானொலி இயக்குநரின் உயர்தர வகுப்பு, பொது வகுப்பு, புதுப்பயிலுநர் வகுப்பு 'அ', 'ஆ' திறமைகாண் சான்றிதழ்களைப் பெறுவதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரி மின்னியல், இலத்திரனியல் சம்பந்தமாக பூரண அறிவைப் பெற்றிருத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் யாவும் 2005.10.28ஆம் திகதிக்கு முன்னர் தொலைத்தொடர்புகள் பணிப்பாளர் நாயகம், 276,எல்விட்டிகல மாவத்தை, மனிங்ரவுன் கொழும்பு-08 என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். இவ் விண்ணப்பம் தொடர்பான மேலதிக விபரங்களைப் பெறுவதற்கு இம் மாதம் 23ஆம் திகதி வெளியர்ன வர்த்தமானப் பத்திரிகையைப் பார்வையிடவும். (த-19)

## இராசி பலன்

27.09.2005

(புரட்டாதி 11, செவ்வாய்க்கிழமை)

தசமி முழுவதும்

புனர்பூசம் சித்தம்பிற்பகல் 05.05 மணிவரை

இராகுகாலம் 03.02-04.32 மணிவரை

சுபநேரம் 10.32-12.02 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | தனவிரயம், கல்வியில் ஆர்வம், மனச்சஞ்சலம், எடுத்த காரியம் தாமதமாகும். |
| இடபம் | நற்கீர்த்தி, மனோதைரியம், காரிய நன்மை, கூட்டு முயற்சி. |
| மிதுனம் | மனோசங்கடம், அதிகசெலவு, ரோக நிலை, திடீர் நன்மை. |
| கடகம் | மாதர் நட்பு, வெகுமானம், நல்லமுயற்சி, தெய்வசிந்தை. |
| சிங்கம் | உஷ்ணநிலை, பிறருக்கு உதவுதல், காரிய தாமதம், சுபசெலவு. |
| கன்னி | நண்பர்கள் சந்திப்பு, சயனசுகம், தனதானிய சேர்க்கை, ஆனந்தம். |
| துலாம் | ஆரோக்கியம், பெரியோரால் மதிக்கப்படுதல், காரிய சித்தி, நன்கொடை. |
| விருச்சிகம் | நிலைமாற்றம், புத்திரரால் கவலை, பிரயாணம், பணவிரயம். |
| தனுசு | அபகீர்த்தி, காரிய தடங்கல், தர்மம், போசன சுகம். |
| மகரம் | நல்ல முயற்சி, தனலாபம், உறவினர் சந்திப்பு, பிறருக்கு உதவுதல். |
| கும்பம் | காரிய அனுகூலம், கீர்த்தி, போசனசுகம், உற்சாகம். |
| மீனம் | தாழ்வுநிலை, முயற்சி தாமதம், தனிவிரயம், போசன சுகம். |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.

- வளவன்

## தேர்தலுக்குமுன் வரவு செலவுத்திட்டம் முன்வைக்கப்படுவதற்கு ஐ.தே.க எதிர்ப்பு

(கொழும்பு)

2006ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்துக்கான அறிக்கை ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் முன்வைக்கப்படுமாயின் அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாக ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது.

அரசாங்கம் ஜனாதிபதித் தேர்தலினை இலக்காகக் கொண்டு வரவு செலவுத்திட்ட அறிக்கையைத் தயாரித்து மக்களை ஏமாற்ற முயல்வதாக அக்கட்சியின் பிரதிப் பொதுச் செயலர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத்திட்டம் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமாயின் அதனைத் தோற்கடிக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (த-4)

## மீளமைப்புக்கென வழங்கப்பட்ட பேரூந்துகள் அமைச்சர் வசம்

(கொழும்பு)

ஆழிப்பேரலை மீளமைப்புப் பணிகளுக்காக இங்கிலாந்திலிருந்து அனுப்பிவைக்கப்பட்ட 34 பேரூந்துகளை அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே இதுவரை போக்குவரத்து சபையிடம் ஒப்படைக்கவில்லை.

இங்கிலாந்து நிறுவனம் ஒன்று 17 சொகுசு பேரூந்துகள் உட்பட 34 பேரூந்துகளை ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட கடலோரப் பகுதிகளின் போக்குவரத்து பாவனைக்காக அனுப்பிவைத்தது.

இலங்கைக்கு இப் பேரூந்துகள் வந்தடைந்துவிட்டன. ஆனால் போக்குவரத்துச் சபையிடம் இப் பேரூந்துகள் ஒப்படைக்கப்படவில்லை என்று போக்குவரத்து சபையின் தலைவர் டிடோர் தயாரட்ண தெரிவித்தார். இது தொடர்பாக அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோவுக்கு பலமுறை கடிதம் அனுப்பியும் பேரூந்துகளை அமைச்சர் கையளிக்கவில்லை என்றும் டிடோர் தயாரட்ண தெரிவித்தார்.

இதனிடையே இப் பேரூந்துகள் அனைத்தும் தன்னிடம் தான் இருப்பதாகவும் தனது தனிப்பட்ட வேண்டுகோளையடுத்தே இப் பேரூந்துகளை அவர்கள் அனுப்பி வைத்ததாகவும் அந்த நிறுவனப் பிரதிநிதிகள் விரைவில் இலங்கை வந்து பேரூந்துகளை ஒப்படைப்பார்கள் என்றும் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார்.

இப் பேரூந்துகள் கொழும்பு, நீர்கொழும்பு, மாத்தறை கடலோரப் பிரதேசங்களில் பயன்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். ஆழிப்பேரலை நிழ்ந்து ஓராண்டாகப் போகும் நிலையிலும் இனி எப்போது ஆலோசனை நடத்தி எப்போது பேரூந்துகளை அமைச்சர் கையளிப்பார் என்று போக்குவரத்து சபையினர் விசனம் தெரிவித்துள்ளனர். (க-4)

## நான் ஓய்வுபெற வழியில்லை; தேர்தல் ஆணையாளர்

### —தயானந்த திஸநாயக்க கவலை தெரிவிப்பு—

நான் எனது ஓய்வூதியக் கொடுபனவைச் சம்பாதித்திருந்த போதிலும் எனக்கு ஓய்வுபெற அனுமதி இல்லையென்று தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த 10 ஆண்டுகளாக நாட்டின் தேர்தல் ஆணையாளராகக் கடமையாற்றவுள்ள ஆறுதடவைகள் மாரடைப்பினால் துன்பப்பட்ட 63 வயதான திஸநாயக்க பத்திரிகையாளர் மாநாட்டிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதிக அதிகாரங்கள் கொண்ட புதிய தேர்தல் ஆணைக்குழுவை அமைக்கும்படியும் அதுவரை திஸநாயக்கவை பதவியில் இருக்கும் வகையிலும் அரசியல் யாப்புத் திருத்தம் 2001ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது.

இருப்பினும் அதற்கு கால வரையறை விதிக்கவில்லை. இப்பொழுது நான்கு வருடங்கள் கழிந்துவிட்டன. அவருடைய ஓய்வுபெறும் வயதிலும் மூன்று வருடங்கள் கடந்துவிட்டன. 2003ஆம் ஆண்டு உயர்நீதிமன்றில் ஓய்வூதியம் கோரி மனுத்தாக்கல் செய்திருந்தார். அவரது மனுவை நிராகரித்த உயர் நீதிமன்றம் அவரைத் தொடர்ந்தும் பணியாற்றப் பணித்தது. (அ-4,9)

## அரச வங்கிப் பிரதிநிதிகளுடன் பிரதமர் மஹிந்த சந்திப்பு

(கொழும்பு)

நாட்டில் உள்ள அனைத்துப் பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் சகல வசதிகளுடனும் கூடிய பாடசாலைகளை அமைக்கப் போவதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அரசாங்க வங்கிப் பிரதிநிதிகளுடன் அலரிமாளிகையில் நடைபெற்ற சந்திப்பின் போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையில் தேசியப் பாடசாலைகளுக்கு மாத்திரம் குறைந்தளவு மாணவர்களை உள்ளீர்ப்பது ஏன் எனக் கேள்வி எழுப்பினார்.

தேசியப் பாடசாலையில் இணைந்து கொள்ளும் உரிமை அனைவருக்கும் உண்டு. கல்விகற்கும் உரிமை சகலருக்கும் உண்டு. அனைத்துப் பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் முழுமையான வசதிகளுடன் கூடிய பாடசாலைகளை அமைப்பதற்கான செயல்திட்டத்தை வகுத்துள்ளதாக பிரதமர் மேலும் தெரிவித்தார். (த-4)

## தேர்தல் சட்டங்களை வலுவாக அமுல்ப்படுத்துவதற்கு தீர்மானம்

(கொழும்பு)

தேர்தல் தொடர்பான சட்டங்களை மிகவும் வலுவான முறையில் அமுல்ப்படுத்துப் போவதாக பொலிஸ் செயலகத்தின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் கர்மினி நவரட்ணம் தெரிவித்துள்ளார்.

தேர்தல் சட்டத்தின் கீழ் பொலிஸார் கடும் நடவடிக்கைகளை எடுக்கவுள்ளார்கள். பொலிஸார் தமது கடமைகளை உரிய முறையில் மேற்கொள்ளுவதற்கு சகல தரப்பினரும் ஒத்துழைப்பைத் தர வேண்டும்.

நிலைமையை அவதானித்து பொலிஸார் இந்தத் தேர்தல் சட்டங்களை முறப்படுத்துவதில் முனைப்புடன் ஈடுபடுவார்கள் என பொலிஸ் செயலகத்தின் பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (க-9)

# "ஏமாந்த நேரத்தில் ஏற்றங்கொண்டோர் கொட்டத்தை அடக்க ஒன்று கூடுவோம்"

## பொங்கு தமிழ் விழாவுக்கு பேணாட் அடிகளார் வாழ்த்து

(யாழ்ப்பாணம்)

ஈழத்தமிழ் மக்களின் வரலாறு இன்று ஒரு திருப்புமுனையில் நிற்கின்றது. ஈழத்தமிழர் என்ற தனித்துவம் கௌரவத்துடன் பேணப்படும் எதிர்காலத்தை உறுதிப்படுத்தி திட்டவட்டமான அரசியல் கட்டமைப்பை நிலைநாட்டும் காலம் வந்துவிட்டது.

ஒன்று திரண்டு ஒரே குரலில் நமது உறுதிப்பாட்டை அனைத்துலக சமூகத்திற்கும் எடுத்துக் கூறவேண்டும். இதற்கேற்ற சந்தர்ப்பமாகிய எதிர்வரும் 30இல் நடைபெறவுள்ள பொங்கு தமிழில் அனைத்துத் தமிழ் மக்களும் சகல விதமான அமைப்புகளும் பங்குபற்றி இக்குரலை பலத்த முழக்கமாக்க வேண்டும்.

இவ்வாறு யாழ்.கத்தோலிக்க மறை மாவட்ட தலைவர் வணபிதா. அ.இ.பேணாட் அடிகளார் வெளியிட்டுள்ள பொங்குதமிழ் தொடர்பான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும், 2001ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இடம்பெற்ற முதல் பொங்கு தமிழ் நிகழ்வில் மக்கள் தமது அபிலாஷைகளை தென்னிலங்கைக்கும் சர்வதேச சமூகத்திற்கும் எடுத்துக் கூறினார்கள்.

இம்முறை நாம் எழுப்பும் முழக்கத்தின் இலக்கு தென்னிலங்கை அல்ல; அவர்களுக்கு நாம் 57 வருடங்களாக எடுத்துக்கூறியது போதும். "இன்று நாம் குறிப்பாக விளிக்கவேண்டியது சர்வதேச சமூகத்தையே. நாம் இறைமையுடன் நம்மையே ஆண்டு வந்த சந்ததியினர்; பறிக்கப்பட்ட இந்த இறைமையை இப்போது மீளப் பெற்றநுபவிக்க முனைந்து நிற்கிறோம்.சர்வதேச சமூகம் எங்கள் நிலைப்பாட்டை ஆதரித்து அங்கீகரிக்க வேண்டுமென்று நாம் கேட் கும் இவ்வேளையில், அச் சமூகத்திற்கு சில விடயங்களை நினைவூட்ட வேண்டிய தேவையும் ஏற்பட்டுள்ளது.

1) "பிரிவினைவாதம்" தமிழ் மக்களுடையதல்ல; பெரும்பான்மைச் சமூகத்தினருடையதே.

2) நாம் இழந்த இறைமையையே மீளப்பெற விழைகின்றோம்.

"இலங்கையர் சமன் சிங்கள பௌத்தர்கள்" என்ற பிரிவினைக் கோட்பாட்டின் அடிப்படையில் சிங்களப் பெரும்பான்மையினர் தமிழ் மக்களை இலங்கை அரசியலிலிருந்து புறந்தள்ளிவிட்டார்கள். முதலில் மலையகத் தமிழ் மக்களின் பிராஜா உரிமை, வாக்குரிமை ஆகியவற்றைப் பறித்து, பாராளுமன்றத்தில் தமிழ் மக்களின் செல்வாக்கை செயலிழக்கச் செய்தார்கள்.1920ஆம் ஆண்டுகளில் ஆங்கிலேயரின் ஆதிக்கத்தை சிங்களவரும் தமிழரும் ஒன்றாக சமமாக, எதிர்த்து ஒன்றாக சமமாக முன்னெடுத்த "சுயபாஷை" இயக்கத்தை, சுதந்திரம் பெற்றபின் "தனிச் சிங்களம்" என்ற சட்டம் மூலம் கொச்சைப்படுத்தி, தமிழையும் தமிழ் மக்களையும் ஒதுக்கி வைத்தனர்.

இதன் விளைவாக, கல்வி, பொதுச்சேவை, அரச நிறுவனங்களுடனான தொடர்பாடல் போன்றவற்றிலிருந்து தமிழரை புறந்தள்ளி வைத்தார்கள்; அரசின் திட்டமிட்ட அனுசரணையுடன் தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்களை உருவாக்கி தமிழ் மக்களுக்கு பாதகமான முறையில் அப் பிரதேசங்களிலே இன விகிதாசாரத்தை மாற்றியமைத்தார்கள்.

தமிழ் மக்களின் அதி முக்கிய செல்வமாகிய கல்விச் செல்வத்துக்கு முடிவுகட்டத் துணிந்தார்கள். தமிழ் மக்களின் கலாசார சின்னங்களை,யாழ்.பொதுநூல் நிலையம் போன்ற சின்னங்களை எரித்து ஒழித்தார்கள். சிறுவர்கள், முதியோர், நோயாளிகள், அகதிகள் என்று பாராது, பாடசாலைகள் வயோதிபர் இல்லங்கள் மீதும், வீடுகள் பொதுக்கட்டடங்கள் மீதும் பரவலாக குண்டுமாரி பொழிந்து இன ஒழிப்பில் ஈடுபட்டார்கள்.

சிறியளவிலான அதிகாரப் பகிர்வுகளை முதலாக மறுத்து ஒற்றையாட்சியை நிறுவினார்கள். அண்மைக் காலத்தில் "இடைக் காலத் தன்னாட்சி அதிகாரசபை" முன்மொழிவை எதிர்த்தார்கள். சுனாமி கடற்கோள் தொடர்பாக முன்வைக்கப்பட்ட, மனிதாபிமான அடிப்படையிலான, கூட்டமைப்பைக் கூட ஏற்கமுடியாதென்று புறக்கணித்து விட்டார்கள்.

இப்போது "தமிழினம் என்ற தனித்துவம் இல்லை; தமிழரின் மரபுவழித் தாயகமென்ற பிரதேசமில்லை" என்று கூறுமளவுக்கு பேரினவாதம் வளர்ந்து, தமிழ்மக்களைப் புறந்தள்ளி நிற்கின்றது.

இவ்வாறு "பிரிவினைவாதத்தை" முன்னெடுத்துச் சென்றுள்ளவர்கள் தமிழ் மக்களல்ல; சிங்களப் பெரும்பான்மையினரே. தமிழ்மக்களின் சுயத்தை மதிப்பதற்கான மனப்பாங்கு சிங்கள அரசியற் சமூகத்திடம் இல்லை.பேரினவாத சவால்களுக்கு முகங்கொடுக்கக் கூடிய மனத்துணிவும்,சாதுரியம் உள்ள தலைவர்களும் அவர்களிடம் இல்லை என்பது வரலாறு எடுத் துக்கூறும் உண்மை.

1833ஆம் ஆண்டில் தமிழ் இராச்சியத்தை தமிழ் மக்களின் விருப்பமின்றி இலங்கையின் ஏனைய இரு பிரதேசங்களுடன் (சிங்களப் பிரதேசங்களுடன்) பிரித்தானியர் என்ற அந்நிய ஆக்கிரமிப்பாளர்கள் இணைத்துவைத்தனர். இலங்கையின் சுதந்திரத்திற்காக விடுதலை இயக்கம் ஒன்று உருவாகிச் செயற்பட்டபோது அதன் தலைமைத்துவத்திலே தமிழ்ப் பிரதிநிதிகள் இருந்து அதை வழிநடத்தினார்கள். விடுதலை அடைந்ததும் பெரும்பான்மையினர் தமது நிறத்தை மாற்றிக்கொண்டார்கள். "ஆறு கடக்கும்மட்டும் அண்ணன் தம்பி; ஆறு கடந்த பின் நீ யாரோ நான் யாரோ" என்ற கூற்றுப் போன்று, தமிழ் மக்களை அந்நியப்படுத்தினார்கள். தமிழ் மக்களின் மீதான அரசியல் ஆதிக்கத்தையும், பெரும்பான்மையினரான சிங்கள மக்கள் கைப்பற்றினார்கள். இது "வெஸ் மின்ஸ்ரா பாராளுமன்ற" முறையில் இலங்கை தனது அரசியற் கட்டமைப்பை வடிவமைத்ததாலேயே ஒழிய, தமிழ் மக்களின் சம்மதத்தினாலோ, ஏதாவது போர் மூலம் எய்திய வெற்றியினாலோ அந்த ஆதிக்கத்தை அவர்கள் பெறவில்லை.

இப்போது இன ஒழிப்பிலிருந்து எம்மைப் பாதுகாப்பதற்கும், எமது தேசிய தனித்துவத்தையும் கௌரவத்தையும் உறுதிப்படுத்துவதற்காகவும் பறிக்கப்பட்ட எமது இறைமையை நாம் மீளப்பெற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

இந்நிலையில், முன்னொரு நாள் தமிழ் மக்கள் தமது மண்ணில் தமது சுயத்தை தாமே நிர்ணயித்த உரிமையை இப்போது மீளப் பெற்றனுபவிப்பதற்கு சர்வதேச சமூகம் ஆதரவு தெரிவிக்கப் போகிறதா? அனறேல், சிங்கள பேரினவாதத்துடன் சேர்ந்து தமிழ் மக்களை ஓரங்கட்டப் போகிறதா? என்று அச் சமூகத்தைக் கேட்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)

## சிந்தித்துச் செயற்படக் காலம் கனிந்துவிட்டது

வவுனியா தமிழ் எழுச்சி நிகழ்வில் முன்வைக்கப்பட்ட பிரகடனத்தின் மூலம் சர்வதேச சமூகத்துக்கு விடுக்கப்பட்ட செய்திக்கு மேலும் வலுச்சேர்க்கும் வகையில் எதிர்வரும் 30ஆம் திகதி பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ள பொங்குதமிழ் 2005 நிகழ்வில் ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகமும் ஒன்றுதிரண்டு வலியுறுத்த வேண்டும். இதனை தமிழ் மக்களாகிய நாம் ஒவ்வொருவரும் சிந்தித்துச் செயற்பட வேண்டும்.

இவ்வாறு யாழ்.பல்கலைக் கழக விவசாயபீட மாணவர்களால் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளைக் கூடத் தரம்றுக்கும் சிங்கள பேரினவாதத்தின் கடும்போக்கை சர்வதேச சமூகத்திற்கு தெரியப்படுத்துவதோடு தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையையும் தன்னாட்சி அதிகாரத்தோடு வாழும் உரிமையையும் அங்கீகரிக்கக் கோருவதோடு அதற்கான எமது போராட்டத்தையும் சர்வதேச சமூக அங்கீகரிக்க வேண்டும் என்று தமிழ் மக்களாகிய நாம் ஒரே குரலில் வெளிப்படுத்த வேண்டும்.

வரலாறு படைக்க காலம் ஒரேயொருமுறை மட்டுமே சந்தர்ப்பம் வழங்கும். அதற்குரிய தருணம் இதுவே. ஆண்டதமிழ் இனம் மீண்டும் தன்னைத்தானே ஆள காலம் ஒரு சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளது. எனவே தமிழ் மக்கள் அனைவரும் சிந்தித்துச் செயற்படுவதன் மூலம் எதிர்காலச் சந்ததியினர் தமக்கென ஒரு சொந்த நாட்டில் சமாதானமாக வாழ வழிசமைப்போமாக என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)

## மாவீரர் மனம்மகிழ மாணவர்கள் எடுத்தும் பொங்குதமிழ் பேராசிரியர் சண்முகதாஸின் பொங்குதமிழ் செய்தி

"சங்குகொண்டே வெற்றி ஊதுவோமே அதைத் தரணிக்கெல்லாம் எடுத்து ஓதுவோமே" என்று பாரதி கூறியதுபோல் உலகத்திற்கு உரத்த குரலிலே "தமிழராகிய நாம் செம்மொழியுடைய உயரினம்;நாம் தற்பொழுது வாழ்ந்து கொண்டிருக்கும் மண்ணிலேதான் பல்லாண்டு வாழ்ந்துகொண்டிருக்கிறோம்! அது எங்களுடைய சொந்த மண்" என்று கூறுவதுதான் பொங்குதமிழ். இந்த மண்ணிற்காக உயிர்நீத்த மாவீரர்கள் மனம் மகிழ யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் எடுத்த ஓர் அரிய முயற்சி பொங்குதமிழ் என பேராசிரியர் சண்முதாஸ் விடுத்துள்ள பொங்குதமிழ் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் நாம் பல இன்னல்களையும் துயர்களையும் அடைந்தபோது எங்கள் குரல் உலகரங்கிற்கு எட்டாதிருந்த வேளையிலே எங்கள் மொழியிலேயே உலகுக்கெல்லாம் பேரறிக்கை செய்தது பொங்குதமிழ். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் மேற்கொண்ட இந்தப் புதுமையான முயற்சிக்குத் தமிழ்க் கரங்கள் உயர்ந்தன! உலகமே இதைக் கண்டு திரும்பியது. பார்த்து வியந்தது. ஆனால் பலன் கிட்டுவதற்குப் பல தடவைகள் ஏற்பட்டன. பல சூழ்ச்சிகள் நடந்தன. இந்த நிலையிலேதான் 30.09.2005 வெள்ளிக்கிழமை பொங்குதமிழ் மீண்டும் நடைபெறவுள்ளது.

எமக்குச் சொந்தமான இடத்திலே நாம் உரிமையுடன் சுதந்திரமாக வாழ வேண்டும் என்பதை உலகிற்குப் பறைசாற்றுவதாக இப் பொங்குதமிழ் அமையவுள்ளது. தமிழர் ஒவ்வொருவரும் இப் பொங்கு தமிழிலே பங்குபற்ற வேண்டும். இது எங்கள் கடமை மாத்திரமல்ல உரிமையும் கூட. உலக நாடுகள் எங்களை அவதானித்துக் கொண்டிருக்கின்றன. வன்முறை எதுவுமின்றி ஒற்றுமை என்னும் மதிப்பான உணர்வுடன் "எங்கள் மண் எங்களுக்குச் சொந்தமானது" என்று தமிழ்மொழியிலே தமிழ் மக்கள் பொங்கு தமிழாலே ஒன்றுகூடி உரத்துக்கூறும் பொழுது உலகநாடுகள் உண்மையை உணர்ந்துகொள்வார்கள் என்பதில் ஐயமில்லை. இதனை உறுதிப்படுத்துவதற்கு முதியோர், இளைஞர், எல்லாத் துறைசார்ந்த பெரியோர், வணிகப் பெருமக்கள், மாணவ சமூகம் முதலாய பொதுமக்கள் எல்லோரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்திற்கு அருகிலுள்ள விளையாட்டு மைதானத்திலே ஒன்றுதிரண்டு உலகத்திற்கு உறுதியாக "எங்கள் நிலமே எமக்கு வேண்டும்" என்று கூறுவதற்கு வருவார்கள் என்பதில் ஐயமில்லை. (து)

## எமது விருப்பை வெளியுலகிற்கு உணர்த்தும் —தேவை தற்போது ஏற்பட்டுள்ளது—

### பத்மினி சிதம்பரநாதன் எம்.பி

(யாழ்ப்பாணம்)

பெண்கள் பண்பாட்டு மையத்தினரால் மாதந்தோறும் நடாத்தப்பட்டுவரும் 'அரங்காலயம்'-12வது நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பங்குகொண்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன் உரையாற்றுகையில்,"மக்கள் அனைவரையும் பொங்குதமிழ் அரங்கிற்கு கொண்டு வரும் பொறுப்பு எங்கள் அனைவரினதும் கைகளில் உள்ளது. நல்லதொரு எதிர்காலத்தை முழுச் சமூகமும் அடைய வேண்டும் என்ற பொறுப்பை பெண்களாகிய நாமும் சுமக்க வேண்டிய நிலையில் உள்ளோம்.எல்லோரும் இந்த அரங்காலயத் தில் முழுவீச்சுடன் பங்குபற்றுவதையும் எழுச்சியுடன் கொண்டாடுவதையும் பாடுவதையும் ஆடுவதை யும் பார்க்கும்போது பொங்குதமிழ் நாளில் பெருமளவாக மக்களை அழைத்து வரக் கூடிய பக்குவநிலை தெரிகிறது.

இலங்கை இராணுவத்தினரால் நிழல் யுத்தம் கட்டவிழ்த்து விடப்பட்டு நாம் ஓர் யுத்த விளிம்பில் நிற்கின்றோம். எமது தேசமெங்கும் உள்ள மக்களை எழுச்சி பெறச் செய்து எமது விருப்பை வெளி உலகிற்கு காட்ட வேண்டிய தேவை உள்ளது. பொங்குதமிழின் வெற்றியில் தான் எமது எதிர்காலம் தங்கியுள்ளது.

இவ்வளவு காலமும் தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்ட வன்முறையினால் அதிகமான பெண்களும் குழந்தைகளுமே பெருமளவில் பாதிக்கப்பட்டனர். எனவே இங்கு பெண்களாகிய நாம் எமது முழு வல்லமையையும் பயன்படுத்தி வன் முறையற்ற எமது உரிமையைப் பெற உழைக்க வேண்டும் என்றார். (த)

## யாழ்.மாவட்ட ஸ்கிறபிள் சங்க அங்குரார்ப்பண நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தின் ஆங்கிலக் கல்வி வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு யாழ்.மாவட்ட ஸ்கிறபிள் சங்கம் (**Association**) கடந்த 17ஆம் திகதி அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில், ஸ்ரீ லங்கா ஸ்கிறபிள் லீக்கின் தலைவர் வைத்திய நிபுணர் எல்.எம். அமரசிங்க கலந்து சிறப்பித்தார். இதன்போது யாழ்.மாவட்ட ஸ்கிறபிள் சங்கத்தின் தலைவராக அ. சிறிகுமாரனும், உபதலைவர்களாக திருமதி. கே.பொன்னம்பலம், திருமதி து.துஷிதரன்,எல்.ஓம்காரமூர்த்தி ஆகியோரும் செயலாளராக லெஸ்லியும் உப செயலாளராக பரராஜசிங்கமும் சுற்றுப் போட்டிகளுக்கான செயலாளராக அன்ரன் ஜெயராஜ்,பொருளாராக திருமதி பு.சுபாகரன், பத்திராதிபராக ஆர்.கணபதிப்பிள்ளை ஆகியோரும் நியமிக்கப்பட்டனர்.

ஆலோசனைச் சபை அங்கத்தவர்களாக அருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம், அருட்திரு ஞானப் பொன்ராஜா பி.விக்னேஸ்வரன், என.ஏ.விமலேந்திரன், எஸ்.தனபாலசிங்கம், எஸ்.சுந்தரேஸ்வரன்,கே. ராசதுரை, வே.கருணாநிதி, வைத்திய கலாநிதி அமரசிங்க, றொகான் றாஜசிங்கம், எஸ்.ஜெயராஜசிங்கம், பொ.மகேஸ்வரன்,பேராசிரியர் மெறில்பெரேரா மற்றும் சிறானிமில் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.


இச் செயற்குழுவின் செயற்பாட்டு காலம் மூன்று ஆண்டுகளாகும். (த)

# கிரேக் சப்பலுக்கு எதிராக அணிதிரளும் இந்திய வீரர்கள்

இந்தியக் கிரிக்கெட் அணி பயிற்சியாளர் கிரேக் சப்பலுக்கும், கப்டன் கங்குலிக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு மோதலாக வெடித்துள்ளது.

இந்தப் பிரச்சினை தொடர்பாக இனறு கிாக்கெட் சபை ஆய்வு குழு விசாரணை நடத்தவுள்ளது. ஏற்கனவே இது சம்பந்தமாக பேட்டியளித்த கங்குலி,

"கிரேக்சப்பல் மீது நான் மட்டும் அதிருப்தியில் இல்லை மற்றவீரர்களும் அதிருப்தியில் இருக்கிறார்கள்" என்று கூறினார்.



இது உண்மை என்று நிருபிக்கும் வகையில் பல வீரர்கள் கிரேக் சப்பலுக்கு எதிராக அணி திரண்டு இருக்கிறார்கள். அவர்களில ஹர்பஜன்சிங் நேற்றுமுன்தினம் வெளிப்படையாக கிரேக் சப்பலை விமர்சித்துக் கருத்துக் கூறினார். வீரர்களை சப்பல் மட்டம் தட்டிப் பேசுகிறார்.

வீரர்களிடம் சில பலவீனங்கள் இருக்கலாம் அதை வீரர்களிடம் சொல்வதால் சரி செய்ய முடியும். அந்தப் பலவீனத்தைக் கூட அவர் கிரிக்கெட் சபையிடம் கூறி வருகிறார். இப்படி இருந்தால் வீரர்களால் எப்படித் தைரியமாக இருக்க முடியும். சப்பலின் நடவடிக்கை வீரர்கள் மத்தியில் மோதலை உருவாக்கும் வகையில் இருக்கிறது என்று கூறினார்.

மற்ற வீரர்கள் இதே போல வெளிப்படையாகக் கருத்துக் கூறாவிட்டாலும் அவர்களும் கிரேக் சப்பலை எதிர்க்கின்றனர். சகீர் கான், யுவராஜ் சிங், ஷேவாக், நெக்ரா, பாலாஜி ஆகியோர் கிரேக் சப்பலை எதிர்கின்றனா. அதே போல லட்ஸ்மனும் பயிற்சியாளர் மீது அதிருப்பதியிலேயே இருக்கிறார். துணை கப்டன, கிரேக் சப்பல் குறித்து இதுவரை கருத்துக் கூறாவிட்டாலும் அவருககும் சப்பல நடவடிக்கையால் அணியில் குழப்பம ஏற்பட்டு இருப்பதால் வருத்தம் அடைந்துள்ளார்.

மூத்த வீரரான கும்பிளே இதுபற்றி வாய் திறக்காமல் மௌனம் சாதித்து வருகிறார். ஆனால் உடைமாற்று அறையில் நடக்கும சம்பவங்கள் அனைவரையும் கவலை கொள்ள வைத்துள்ளது.

ஒரு சில வீரர்களைத் தவிர அனைத்து வீர்களுமே இப்போது கிரேக் சப்பலுக்கு எதிராக திரும்பி இருக்கிறர்கள். அவர்களிடம இது பற்றி கேட்டபோது 'கிரேக் சப்பல் ஒரு கொடூர மனிதர் போல செயல்படுகிறார். அவருடைய நடவடிக்கை பள்ளிக்கூட வாத்தியார் போல இருக்கின்றன.

இதனால அணிக்குப் பலவீனம் எற்பட்டு விட்டது. அவருடைய ஒழுங்கு நடவடிக்கைக்கு நாங்கள் எதிராக இல்லை. ஆனால் அவர் எங்களிடம் மோசமாக நடந்து கொள்கிறார். எதுக்குமே அவரிடத்தில் போக முடியவில்லை. நாம் ஒன்றை நினைத்துச் சொன்னால அவரது பதில் வேறு மாதிரி இருக்கிறது. எனவே ஒவ்வொருவருக்கும் நாங்கள் பயப்படு கிறோம என்று கூறினார்கள்.

மூத்த வீரர் ஒருவர் கூறும்போது "இந்திய அணியில் கடந்த 6 ஆண்டுகளாக விளையாடுகிறேன். இது போன்ற சூழ்நிலையை ஒரு போதும் சந்தித்தது இல்லை. பயிற்சியாளர் மூலம் ஒரு அச்சுறுத்தல் இருப்பதாக உணர்கிறோம்' என்று கூறினார்.


2007ஆம ஆண்டு உலகக் கோப்பை போடடிக்கு அணியைத் தயார் படுத்துவதாக சப்பல் கூறுகிறார். வீரர்களுக்கு பாதுகாப்பு இல்லாத நிலையில் இது எப்படி சாத்தியம் ஆகும் என்ற வீரர்கள் கூறினார்கள்.

கிரிக்கெட் அணி முகாமையாளா அமிதாப் சவுத்திரியும் கிரேக் சப்பலுக்கு எதிராக கருத்துக்களை கூறியுள்ளார். கங்குலி மது தவறான குற்றச்சாட்டுகளை கிரேக் சப்பல கூறுகிறார் என அவர் தெரிவித்துள்ளார். வீரர்கள் ஒவ்வொருவரிடமும் கிரிகெட் சபை விசாரிக்க வேண்டும் என்று ஹர்பஜன் சிங் கூறியிருக்கிறார்.

அதன்படி அனைத்து வீரர்களிடமும் விசாரித்தால் கிரேக் சப்பல் மீது புகார்களை அள்ளி வீச அவர்கள் தயாராகி வருகின்றனர். இந்திய வீரர்கள் ஒவ்வொருவர் பலவீனம் பற்றியும் தனக்கு வேண்டிய பத்திரிகையாளர்களுக்கு கிரேக சப்பல் ஈ-மெயில் மூலம் தகவல் தெரிவிப்பதாகவும புகார் கூறப்படுகிறது.

கிரேக் சப்பலின் புகார் அடிப்படையில் கங்குலி மீது நடவடிக்கை எடுக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இப்போது உள்ள நிலைமையைப் பார்த்தால் சப்பலுக்கு எதிராக திசை மாறலாம் என்று தெரிகிறது.

(அ-19)



ஏ-1 கார் ரேஸ் பந்தயம் முதன் முறையாக லண்டனில் நேற்று முன்தினம் நடைபெற்றது. மொத்தம் 25 வீரர்கள் கலந்து கொண்ட இப்போட்டியில் பிரேசிலின் நெல்சன் பிக்குயிட் சம்பியன் பட்டம் வென்றார்.

## விளையாட்டு செய்திகள்

# தரவரிசையில் சானியா பின்தள்ளப்பட்டுள்ளார்

இந்தியாவின் இளம்புயல் ரென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா தனது ஆக்ரோசமான ஆட்டத்தாலும் கவர்ச்சியாலும் உலக ரென்னிஸில் மிகவும் பிரபலமடைந்துள்ளார்.

இந்தியாவில் கிரிக்கெட் விளையாட்டுக்கு மட்டுமே பெருமளவில இருந்த ரசிகர்



கள் தற்போது சானியாவின் ஆட்டத்ததால அவர் பக்கமும் திரும்பியுள்ளனர். அமெரிக்க ஓபன் ரென்னிசில் 4ஆவது சுற்றுவரை முன்னேறியதன் மூலம் சானியா ரென்னிஸ் தர வரிசையில் 34ஆவது இடத்துக்கு முனனேறினார்.

இந்த நிலையில் கொல்கத்தாவில் சன்பஸ்ட் ஓபன் ரென்னிஸ் போட்டியில் சானியா கலந்து கொண்டு ஆடினார். சொந்த நாட்டில் ஆடுவதால் பட்டம் வெல்வார் என அனைவராலும் எதிர்பார்க்கப்பட்டார். ஆனால மாறாக அவர் இரண்டாவது சுற்றிலேயே தோலவியடைந்து போட்டியிலிருந்து வெளியேறினார்.

இதேபோன்று இட்டையர் பிரிவிலும் அரை இறுதிவரை முன்னேறி தோல்வி அடைந்தா இத்னால் சன் பீஸ்ட் ஓபன் ரென்னிஸ் போட்டி முடிவில் தரவரிசை பட்டியலில் சானியா மிர்சா 37ஆவது இடத்துக்குப் பின் தள்ளப்பட்டுள்ளார்.

இந்திய வீரர், வீராங்கனைகளை பொறுத்த வரையில் விளையாட்டில் பிரபலம் அடைந்து விட்டால் போதும் அதன் மூலம் விளம்பரங்களில் தோன்றி அதிக பணம் சம்பாதித்து விடுகின்றனர். இதற்கு சானியா மட்டும் விதி வலக்கு அல்ல. இந்த ஆண்டின் தொடக்கத் தில் ரூ.5 இலட்சம் வரை விளம்பரத்திற்காக ஒப்பந்தம் செய்யப்பட்டார் சானியா.

தற்போது அமெரிக்க ஓபன் கிராண்ட் சிலாம் போட்டியில் பங்கேற்றதன் மூலம் அவின் விளம்பர ஒப்பந்த தொகை ரூ.1 கோடியாக உயர்ந்துள்ளது. தற்போது சானியா மிர்சா ஹுண்டாய் கார் நிறுவனத்தின் விளம்பரதாரராக ரூ.1கோடிககு ஒப்பந்தம் செய்யபபட்டுள்ளார்.

(அ-19)

# கிர்க்கெற் சூதாட்டத்தில் 157 பெயர்கள் பதிவாகியுள்ளன

கிரிக்கெட் சூதாட்டத்தில் ஹிந்தி நடிகர், நடிகைகளுக்கு தொடர்பு இருப்பதாக மும்பை பார் நடன அழகி திடுக்கிடும தகவல்களை வெளியிட்டுள்ளார்.

கிரிக்கெட் சூதாட்டதில் 25 வயதான மும்பை பார் நடன அழகி தாருன்னும்கானுக்கு தொடர்பு இருப்பது தெரியவந்தது.

அதைத் தொடர்ந்து மும்பையில் உள்ள நடன அழகியின் வீட்டில் வருமானவரி அதிகாரிகள் அதிரடி சோதனை நடத்தி அவரைக் கைது செய்தனா. மேலும் இரண்டு முகவர்களும் கைது செய்யப்பட்டனர். நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தி பொலிஸார் தங்கள் காவலில் எடுத்துவிசாரணை நடத்தினர்.

அவர்களை மேலும் பொலிஸ் காவலில வைத்து விசாரிக்க அனுமதி கோரி பொலிஸ தரப்பில் நேற்று மனுதாக்கல் செய்யப்பட்டது. கைது மனுவில், தன்னுவின் மொபைல் போனில் ஹிந்தி நடிகர், நடிகைகள், கிரிக்கெட் வீரர்கள் முகவர்கள் உட்பட 157 பேரின் பெயர்கள் பதிவாகி இருப்பதாகவும் அவர்களிடம் விசாரணை நடத்த வேண்டி இருககிறது என்றும் கூறப்பட்டுள்ளது.

(த-19)

# கங்குலி - சப்பல் பிரச்சினையால் கவலையடைந்துள்ளார் டிராவிட்

அநநிய மண்ணில் 18 ஆண்டுகளுக்குப பிறகு டெஸ்ட் தொடரில் கோப்பை வென்றது மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது. இத்தொடாில் துடுப்பாட்டம் பந்து வீச்சு இரண்டிலும் நமது வீரர்கள் அசத்தி விட்டனர் இர்பான பதான மிக அபாரமாக பந்துவீசினார். சகீர் கானும் நல்ல ஒத்துழைப்பு அளித்தார். முன் வரிசை துடுப்பாட்ட வீரர்கள் இரண்டு போட்டியிலும் சிறப்பாக ஸ்கோர் செய்தனா என்ற தெரிவித்தார் துணைக்கப்டன் டிராவிட்.

அனுபவமற்ற அணியாக சிம்பாப்வே இருந்தாலும் அவர்களும் நன்றாகவே ஆடினா். அடுத்ததூக இந்த அணி இந்தியாவில் உள்ளூர் அணிகள் மோதும் துலீப்டிராபி தொடரில் பங்கேற்க வருகிறது. இத் தொடர் அவர்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும் என நம்புகிறேன். தங்கள் திறமையை வளர்த்துக்கொள்ள சிம்பாப்வே வீரர்களுக்க கிடைத்துள்ள மிகப்பெரிய வாய்ப்பு இது.கங்குலி - சப்பல் இடையிலான சம்பவம் பெரும் பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளது. கவலையளிக்கிறது.

இது அவர்களின் தனிப்பட்ட விடயம் என்பதால நேரடியாக கருத்துக் கூற விரும்புவில்லை. தவிர, சில சமயம் நமது கருத்தே வதந்தியாக மாறும் அபாயமும் உள்ளது.

இதனால் மற்றவர்கள் பிரச்சினையில் தலையிட விரும்பவில்லை. இப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு கிடைக்கும் என எதிர்பார்க்கிறேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(த-19)

# இனிவரும் போட்டிகளில் வெற்றிபெற்று ரசிகர்களை மகிழ்விப்பேன் - சானியா

இந்தியாவின் நட்சத்திர ரென்னிஸ் வீராங்கனையான சானியா மிர்சா சன்பீஸ்ட் தொடர் குறித்து தனது கருத்துக்களை நம்முடன் பகிர்ந்து கொள்கிறார்.

சன்பீஸ்ட் தொடரில் நான் கோப்பை வெல்வேன் என நாடே எதிர்பார்த்தது. ஆனால் ஒற்றையர் பிரிவில் இரண்டாவது செட்டிலே தோல்வி அடைந்தது பெரும் ஏமாற்றத்தை அளிக்கிறது என்னைப் பொறுத்த வரையில் இப்போட்டியில் சிறப்பான ஆட்டத்தையே வெளிப்படுத்தினேன். முதல் செட்டை 6-0 என்ற கணக்கில் கைப்பற்றியதும், யாராக இருந்தாலும் எளிதாக வெனறு விடலாம் என்றுதான் நினைப்பார்கள் அப்படித்தான் நானும் நினைத்திருந்தேன்.

ஆனால, மெலிண்டா இரண்டாவது மூன்றாவது செட்டில் அபாரமாக ஆடி விட்டார். இதனால் கடைசிவரை போராடியபோதும் என்னால் வெற்றியை எட்ட முடியவில்லை. யு.எஸ். ஓபனுக்கு பிறகு விளையாடிய இரண்டு தொடர்களிலும் துவக்கத்திலே வெளியேறி உள்ளேன். இந்தத் தோல்வி இனிவரும் தொடர்களிலும் தொடரக் கூடாது என்பதில் உறுதியுடன் இருக்கிறேன்.

பயிற்சியாளர் உதவியுடன் எனது தவறுகளை திருத்திக்கொண்டு வருகிறேன்.

வெற்றி, தோல்வி என்பது விளையாட்டில் ஓா அங்கம் தான். ஆனாலும் இந்திய ரசிகர்



களைப் பொறுத்த வரையில் தோல்வியை ஏற்க விரும்பாதவர்கள் மற்ற நாட்டவர்களைக் காட்டிலும் நம்மவர்கள் உணர்ச்சிவசப்படுபவர்கள் என்பதை நன்கு புரிந்து கொண்டுள்ளேன்.

அடுத்துவரும் போட்டிகளில் வெற்றி பெற்று ரசிகர்களை மீண்டும் நான் மகிழ்ச்சியடையச் செய்யவேண்டும் என்பதுதான தனது தற்போதைய குறிக்கோள் எனவும் தெரிவித்தார்.

(த-19)

# கடல் கடந்த நாட்டிலிருந்து பொங்கு தமிழ் நிகழ்வுக்கு வாழ்த்து

உலகனைத்தும் உள்ள தமிழ் மாணவர் ஒன்றியங்களுடனும் இணைந்து எமது ஒற்றுமையின், பலத்தை வெளிப்படுத்தி இந்தப் பொங்கு தமிழ் நிகழ்வுக்கு எமது பூரண ஆதரவை வழங்கி நிற்பதில் கால்ரன் பல்கலைக் கழகத் தமிழ் மாணவர்களாகிய நாம் பெருமை கொள்கின்றோம்.

தமது தாயகத்தில் எமது மக்கள் படும் துயரங்களை வெளிக்கொணருவதிலும் அவர்களுக்கு ஒரு நீதியான, நிரந்தரமான தீர்வை ஏற்படுத்திக்கொடுப்பதிலும் தாயகத்தை விட்டு புலம் பெயர்ந்து வாழ்கின்ற மாணவா சமுதாயமாகிய எமக்கு மிகப்பெரும் கடமை உள்ளது. அமைதியான முறையில் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் செப்படம்பர் 30ஆம் திகதி நடாத்த இருக்கும் இந்தப் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வு சிறப்புற அமைய எமது மனமார்ந்த வாழ்த்துக்களை வழங்கி நிற்கின்றோம்.

கடந்த வருடம் கனடாவில் இடம்பெற்ற பொங்க தமிழ் நிகழ்வு புலம்பெயர்ந்து வாழும் எமது மக்களின் உணர்வுகளை வெகுவாக வெளிப்படுத்தி நின்றது. எமது மக்களின் உரிமைக்கு நாம் என்றொன்றும் குரல் கொடுப்போம் என்பதற்கு இது ஒரு நல்ல சான்றாக விளங்கியது. இதை சர்வதேச சமூகம் உணர்ந்து தமிழ் மக்கள் மீதான அடக்கு முறைக்கு முற்றுப்புள்ளி வைக்க முழு மனதுடன் செயற்பட வேண்டும் என்று சர்வதேச சமூகத்தை இத்தருணத்தில் வேண்டி நிற்கின்றோம்.

இவ்வாறு கனடாவின் தலை நகரான ஒட்டாவாவில் அமைந்துள்ள கால்ரன் பல்கலைக் கழக தமிழ் மாணவர் மன்ற செயற் குழு யாழ் பொங்கு தமிழ் நிகழ்வுக்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளது. (து)

# பாம்புக்குத் தலை, மீனுக்கு வால் மஹிந்தவின் இன்றைய நிலை இதுவா?

(கொழும்பு)

இ.தொ.கா வுடனான சந்திப்பின்போது மஹிந்த ராஜபக்ஷ,சுனாமி நிவாரண பொதுக் கட்டமைப்பினை ஏற்படுத்துதல், இடைக் கால நிர்வாக சபை தொடர்பில் பேச்சுக்கள் நடாத்துதல், சமஷ்டி அமைப்பை ஏற்படுத்துதல் போன்ற விடயங்களுக்கு சம்மதம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தனியாக முஸ்லிம் காங்கிரசுடன் பேச்சுக்களை நடாத்திய அவர் விசேடமாக முஸ்லம்களின் நிர்வாகம் உட்பட்டதான சமஷ்டி அமைப்பை வட கிழக்கில் ஏற்படுத்துவேன் என உறுதியளித்துள்ளார்.

முஸ்லிம் காங்கிரசையும் இ.தொ.காவையும் தனியாக சந்தித்துப் பேசிய பிரதமர் மேற்கண்டவாறு உறுதியளித்ததுடன் ஜே.வி. பியுடனும், ஹெல உறுமயவுடனும் செய்துள்ள ஒப்பந்தங்கள் சிங்கள பௌத்தர்களின் வாக்குகளை பெறுவதற்காகவே என்றும் தெரிவித்திருக்கிறார்.

இதற்குப் பதிலளித்துள்ள இ.தொ.காவும், முஸ்லிம் காங்கிரசும் தாம் ஆதரவு அளிப்பதற்கு முன் பிரதமரின் மேற்படி உறுதி மொழிகள் அனைத்தும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்படல் வேண்டும் எனக் கூறியுள்ளார். (து-6)

# திருமலைக் கடலில் விசித்திர ஒளி

(திருகோணமலை).

திருமலை டைக்ஸ் வீதியில் உள்ள வைத்தியசாலைக்கு பின்புறமாக உள்ள கடலில் கடந்த சனிக்கிழமை நீருக்கு அடியிலிருந்த ஒரு விசித்திரமான ஒளி தென்பட்டதாகவும் கடல் நீரின் நிறம் சில இடங்களில் மென்பச்சையாகவும், சில இடங்களில் இளம் சிவப்பாகவும் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடல் நீரை சிலர் பாத்திரங்களில் அள்ளிச் சென்று கடற்கரையிலிருந்து சற்றுத் தூரத்தில் கொண்டு சென்று ஊற்றியபோதும் அதே நிறத்திலேயே நீர் தெரிந்ததாகவும் அப்பகுதி வாசிகள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தைப் பார்ப்பதற்கு ஆயிரக்கணக்கான மக்கள் அப்பகுதிகளில் குவிந்தனர். ஆனால், அவர்கள் மத்தியில் ஓர் அச்ச நிலை தோன்றியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எதனால் கடலின் அடியிலிருந்து ஒளி தென்படுகிறது? ஏன் நீரின் நிறம் மாறியுள்ளது என்பன தொடர்பில் எதுவும் தெரியாத நிலையிலேயே மக்கள் அச்சம் கொண்டுள்ளனர்.

வெளிச்சத்தை வெளியிடக்கூடிய கடல் வாழ் உயிரினங்கள் பெருமளவில் அப்பகுதியில் வந்திருக்கலாம் அதனாலேயே கடலிலிருந்து ஒளிக்கீற்று தென்படுவதாக அப்பகுதி முதியவர் ஒருவர் தெரிவித்தார்.

ஆழிப்பேரலை அனர்த்தம் ஏற்படுவதற்கு சில வாரங்களிற்கு முன்பு மட்டக்களப்பு, கல்லடி கடற்பகுதியிலும் இது போன்ற ஒளி தென்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, திருமலை மாவட்டத்தின் வேறு சில பகுதிகளில் கடல் நீர் சற்று உட்சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ற)

# தேசிய ஒற்றுமையை உருவாக்கும் அரசியல் யாப்பு உருவாக வேண்டும்

அனைத்து இனங்களுக்கும் கௌரவத்தை ஏற்படுத்தக்கூடிய அரசியல் அமைப்பு ஒன்றினை உருவாக்குவதே தமது நோக்கம் என ஜனநாயக இடது சாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்'கார தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

எமக்கு யுத்தம் வேண்டாம், தேசிய ஒற்றுமையே வேண்டும் அதற்கு அனைத்து இனங்களினதும் கௌரவத்தினை உறுதிசெய்யும் அரசியல் யாப்பு ஒன்று வேண்டும். சில வேளைகளில் ஹெல உறுமயவுடனும்,ஜே.வி.பியுடனும் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் இதற்கு விரோதமான முன்மொழிகள் இருக்கலாம் எனத் தெரிவித்தார். (த-4)





வடமராட்சியில் உள்ள கியூடெக் நிறுவனத்தின் முன்பள்ளிகளினது கலைவிழா கடந்த 21ஆம் திகதி பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடமராட்சியில் உள்ள கியூடெக் நிறுவனத்தின் அனைத்து முன்பள்ளிகளும் பங்கு பற்றின. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக் கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தின் இயக்குனர் வணபிதா ஜெயக்குமார் அடிகளார் கலந்து கொண்டார். முன்பள்ளி மாணவரது கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

(படங்கள்: ஐங்கரன்)

# கிராமிய படைப் பயிற்சி

வவுனியா வடக்குப் பிரதேசத்தில் கிராமியப் படைக்கான ஆரம்பப் பயிற்சிகள் ஆரம்பமாகியுள்ளன.

புளியங்குளம் பிரதேச மக்களுக்கான ஆரம்ப பயிற்சி நிகழ்வு கடந்த வியாழக் கிழமை ஆரம்பமாகியது.

இக்கிராமியப் படைக்கான ஆரம்ப பயிற்சியின் போது ஆயுதப்பயிற்சி வழங்கப்படுகின்றது.

கிராமியப் படையில் இணைந்து பயிற்சி பெற பலர் முன்வந்துள்ளபோதிலும் இவர்களில் முதற்கட்டமாக ஆயிரம் பேருக்கு ஆயுதப்பயிற்சி அளிக்கப்படுவதாகத் தெரிகிறது. (து)

# மோட்டார் சைக்கிள் திருடர்களின் அட்டகாசம்

சமீபகாலமாக நல்லூர் வடக்கு, கலைமகள் வீதியில் மோட்டார் சைக்கிள் திருடர்களின் ஆதிக்கம் கூடி வருவதாகவும் அதனால பகல் நேரத்தில் கூட பெண்கள் அவ் வீதியல் அச்சமின்றி நடமாட முடியாத நிலை ஏற்பட்டு வருவதாகவும் அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கிறார்கள்.

ஒரு சில தினங்களுக்கு முன் பகல் நேரத்தில் அவ்வீதிவழியே சென்ற இளம் பெண் ஒருவரை பின் தொடர்ந்து இரு மோட்டார் சைக்கிள் திருடர்கள் அப் பெண்ணை வழி மறித்து இந்த விலாசம் தெரியுமா? என்று கேட்டபடி அவரது கழுத்துச் சங்கிலியை அறுக்க முற்பட்ட போது அப்பெண் கூச்சலிட்டதால் முயற்சி பலிக்காமல் அணிகள் தப்பியோடி விட்டதாகத் தெரிகிறது.

சன நடமாட்டம் குறைந்த நேரங்களில் கலைமகள் வீதி, ராணி வீதி முதலிய இடங்களில் கூட்டங் கூட்டமாக நிற்கும் இத்திருடர்கள் தனியே செல்லும் பெண்களைத் தொடர்ந்து சென்று தமது கைவரிசையைக் காட்ட முயற்சித்து வருகிறார்கள்.

அண்மைக்காலமாக பொலிஸாரின் வீதி ரோந்து, நடமாட்டம் என்பன முடக்கப்பட்ட நிலையில் அவர்கள் தட்டிக் கேட்க ஆளில்லாதவர்களாக ஆகிவிட்டார்கள்.

கழுத்தில் மைனர் சங்கிலி, கையில் கனத்த சங்கிலி, விலை உயர்ந்த உடைகள், புத்தம் புதிய மோட்டார் சையிக்கிள்கள் என பவனி வர இந்த மோட்டார் சையிக்கிள் திருடர்களுக்கு எங்கிருந்து பணம் கொட்டுகிறது எனப் பொதுமக்கள் கேள்வி எழுப்புகிறார்கள். (து)



சிவ்லிங்க யோகா கேந்திர நிலையத்தினால் வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் அப்பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்பட்ட யோகாசனப் பயிற்சியின் போது எடுக்கப்பட்ட படம்.

# மதமாற்றத்தை தடுக்க முயலும் வடமாநில இந்து மன்றம்

சைவ சமயத்தைச் சேர்ந்தவர்களின் மனதை மாற்றி அவர்களை மதம் மாறச் செய்யும் முயற்சிகளைத் தடுத்து நிறுத்துவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு தாளையடி, திருநெல்வேலியில் இயங்கிவரும் வட மாநில இந்து மாமன்றம் பாடசாலைமாணவர்களுக்கு இலவச புத்தகங்கள், காலணி, மதிய உணவு வழங்கல் போன்ற முயற்சிகளில் தன்னை ஈடுபடுத்திச் செயலாற்றி வருகிறது.

இம்மன்றத்தின் சார்பில் மண்டைதீவு மகா வித்தியலாயம், வேலணை சரஸ்வதி வித்தியாலயம், மண்கும்பான் அ.த.க.பாடசாலை ஆகியவற்றில் கல்வி பயிலும் மாணவர்களுக்குத் தினசரி மதிய உணவு வழங்கிவருகிறது. அத்துடன் காலத்துக்குக் காலம் வெளிநாடுகளில் வசிக்கும் அன்பர்கள் வழங்கும் நிதியுதவியுடன் மாணவர்களுக்குப் பாடசாலை உபகரணங்கள் வழங்கும் பணியும் மேற்கொள்ளப்படுகிறது எனத் தெரிவித்த மேற்படி மன்றத்தின் அமைப்பாளர் எஸ்.குணராசா, வரும் ஐப்பசி மாதம் முதல் வெள்ளிக்கிழமை வேலணை மத்திய கல்லூரியில் சமய தீட்சை அளிக்க ஏற்பாடுகள் செய்யப்படுவதகாவும் தெரிவித்துள்ளார். (து)

# மூக்குக் கண்ணாடி இலவச விநியோகம்

தாளையடி, திருநெல்வேலியில் இயங்கி வரும் வடமாநில இந்துமா மன்றத்துக்கு கனடா வாழ் மன்ற ஆதரவாளர்கள் வழங்கிய ஒரு தொகை வாசிப்புக்குரிய மூக்குக் கண்ணாடிகள், இன்றைய தினத்திலிருந்து மாலை 2 மணி முதல் 5 மணி வரை 'அ' குடும்ப அட்டை வைத்திருக்கும் பார்வை குன்றியவர்களுக்கு இலவசமாக வழங்கப்படுமென மன்றத்தின் அமைப்பாளர் எஸ்.குணராசா அறிவித்துள்ளார். கண்ணாடியைப் பெற விரும்புவர்கள் மேற்குறிப்பிட்ட நேரத்தில் 'அ' குடும்ப அட்டையுடன், வடமாநில இந்து மாமன்றம், தாளையாடி திருநெல்வேலி என்ற விலாசத்திலுள்ள மன்றப் பணிமனைக்கு நேரில் வந்து கண்ணாடியைப் பெற்றுக்கொள்ளலாமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (து)

## பற்சிகிச்சை முகாம்

(சுதுமலை)

பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு இனிப்பு வகைகள், ரொபிகளை அதிகளவில் கொடுத்தல் சரியான முறையில் பல்துலக்கும் பழக்கத்தை ஏற்படுத்தாமை காரணமாக பற்சூத்தை, பற்காவிகளில் பாதிக்கப்படும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்து காணப்படுவதாக சிரேஷ்ட பாடசாலை பற்சிகிச்சையினர் திருமதி என்.ராஜதுரை தெரிவித்தார்.

கடந்தவாரம் ஐந்து தினங்கள் இளவாளைப் பகுதியில் பாடசாலைகள், முன்பள்ளி மாணவர்களிற்கு நடமாடும் பற்சிகிச்சை முகாம் ஒன்று நடைபெற்றது. இதில் சுமார் 200க்கும அதிகமான மாணவர்களிற்கு உரிய சிகிச்சைகள் வழங்கப்பட்டது.

மேலும் இது தொடர்பாக பெற்றோர்களிற்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

ஐந்து நாட்கள் நடைபெற்ற இம் முகாமில் இரண்டு பாடசாலை பற்சிகிச்சையாளர்கள் சிகிச்சை வழங்கினார்கள். இம் முகாமிற்கான ஏற்பாடுகள் இளவாளைப் பகுதி [illegible] சுகாதரப் பரிசோதகர் கே.நிர்மலானந்தன் மேற்கொண்டார்.




பெண்களின் வாழ்க்கையில் முதல் முப்பது ஆண்டுகள் வரையிலும்தான் உடலளவில் நிறைவான ஆண்டுகள் எனலாம். இந்தக் காலம் வரை பெண்கள் செழுமையாக இருப்பார்கள். இதற்கு மேற்பட்ட காலத்திலிருந்து கொஞ்சம் கொஞ்சமாகத் தடுமாற ஆரம்பிப்பார்கள்.

நாற்பதுக்கு மேல் தடுமாற்றங்களைத் தவிர்க்க இயலுவதில்லை. நாற்பது வயதில் நாய்க்குணம் என்பதைப் போல நடந்துகொள்ள ஆரம்பித்து விடுகிறார்கள்.

"இவர்களுக்கு என்ன ஆயிற்று? ஏன் அடிக்கடி வித்தியாசமாக நடந்து கொள்கிறார்கள்? சற்று முன்புதானே சிரித்துப் பேசினார். இப்படி எரிந்து விழுகிறாரே".

"நான் பிழையாகச் சொல்லவில்லையே... அதற்குப் போய் இப்படி அழுகிறாளே". இப்படி மற்றவர்களுக்குப் புதிராகத் தோன்றுவது நாற்பதுக்கு மேற்பட்ட காலக் கட்டங்கள்.

அது மட்டுமல்ல... வேகமாக நடைநடந்து ஓடியாடி ஓய்வில்லாமல் வேலைசெய்தவள் களைத்துப்

## நாற்பதில் தொடங்கும் தடுமாற்றங்கள்



போய் உட்கார்ந்துவிடுவதும் மூட்டு வலி, முதுகுப்பிடிப்பு என உட்கார்ந்து விடுவதும் மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கசிரமப்படுவதும் இந்த நாற்பதுக்கு மேல்தான் நடக்கிறது. என்ன ஆயிற்று?

எல்லோருமே இப்படித்தான் ஆச்சரியமாகக் கேட்டுக் கொண்டி ருப்பார்கள். வேறுஒன்றும்ஆகவில்லை. அவளது பெண்மைக்கிருந்த பாதுகாப்பு கொஞ்சம் கொஞ்சமாகப் போய்க் கொண்டிருக்கிறது.

அதாவது அவளைப் பாதுகாத்துக் கொண்டிருந்த பெண்மை ஹார்மோனான ஈஸ்ட்ரோஜென் குறைய ஆரம்பித்துக் கொண்டிருக்கிறது.

மாதவிலக்கு முற்றிலுமாக நிற்பதற்கு தயாராகிக் கொண்டிருப்பதற்கு அடையாளமாக இரண்டு மூன்று மாதங்கள் வரையில் காணாமல் இருந்து விட்டு மீண்டும் பிறகு வருகிறது.

இந்தக் ஹார்மோனின் குறைபாட்டின் காரணமாக நோய்கள் உடலுக்குள் எட்டிப் பார்க்கின்றன. குழந்தை குடியிருந்த கருப்பையில் கொடிய கட்டிகள் முளைக்க ஆரம்பிக்கின்றன.

எந்தக் குடும்பத்திற்காக உடல்நலக் குறைகளை பொருட்படுத்தாமல் ஓடி ஆடினாளோ... அதே குடும்பத்தில் யாரும் பொருட்படுத்தாமல் விடும் சூழலின் ஆரம்பக் கட்டத்தில் அடியெடுத்து வைக்கிறாள்.

பிள்ளைகளுக்கு நல்ல வாழ்க்கையை அமைத்துக்கொடுக்க வேண்டும் என்ற உந்துதல்கள் ஒருபுறமும் பிள்ளைகளுக்கென்று ஒரு வாழ்க்கை அமைந்த பின் அவர்கள் தன்னைக் கண்டு கொள்ளாமல் செல்வதாக நினைக்கும் போது படபடப்பும் தடுமாற்றங்களும் தானாக வருகின்றன.

இப்படி உடல் மற்றும் மனம் சார்ந்த பிரச்சினைகளால் பாதிக்கப்பட்ட பெண்கள் பின்வரும் வழிகளில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

### பெண்களின் கவனத்திற்கு

நாற்பது வயதுக்கு மேற்பட்ட வயதிலுள்ளவர்கள் ஈஸ்ட்ரோஜென் பரிசோதனை மேற்கொள்வது நல்லது.

மாதவிலக்கு குறைவாக இருந்தாலே, இயல்பாக இருந்தாலோ பரவாயில்லை. அளவுக்கு அதிகமாக இருந்தால் கருப்பையில் ஏதேனும் பிரச்சினைகள் இருக்கலாம். மருத்துவரைப் பார்க்க வேண்டும்.

எலும்புத் தேய்மானம் இந்த வயதுக்கு மேல் கூடுதலாக ஆரம்பிப்பதால் சத்து மிகுந்த காய்கறிகள் கல்சியம் சேர்ந்த உணவுப் பொருட்களைச் சாப்பிடுவது நல்லது.

கடினமானப் பொருட்களைத் தூக்காமலும் திடீரென குனிந்து நிமிர்ந்து வேலை செய்யாமலும் இருப்பது உடல் நலனைப் பாதுகாத்துக் கொள்ளும் வழி.

எந்தப் பிரச்சினை ஏற்பட்டாலும் நாளை பார்க்கலாம் எனத் தயங்காமல் மருத்துவரை அணுகவேண்டும்.

> ஒரு நாட்டிலுள்ள பெண்கள் எப்படி நடத்தப்படுகிறார்களோ, அதை வைத்து அந்த நாட்டின் நாகரீகத்தைக் கணித்துவிடலாம்.
> –கார்டிஸ்.

## உறவுகளை விட்டு விடாதீர்கள்



குடும்பங்களைப் பெரும்பாலும் தாங்கிப் பிடிப்பது உறவுகள். கிராமங்களின் முதுகெலும்பு உறவுகள் தான். இன்றைக்கும் கிராமத்தில் ஒருவருக்கு ஒன்று என்றால் அவரது உறவுகள் கூட்டமே ஒரு ஊர் போல ஒன்று கூடும். பிரச்சினைக்கு உடனே தீர்வு காணும்.

நகரங்களில் உறவுகள் என்பது காண அரிதான ஒரு விஷயமாகி இருக்கிறது. பெரும்பாலும் கூட்டுக் குடும்பங்கள் என்ற நிலை என்றைக்கு மாறி தனிக் குடித்தனங்கள் என்ற நிலைக்கு வந்ததோ அப்போதே உறவுகளும் கண்காணாத தூரமாகி விட்டது.

தனது வசதிக்காக உறவுகளைச் சுருக்கிக் கொண்டவர்களும் உண்டு. அதிக வருமானம் புதிய கௌரவம் என்று சமூகத்தில் தனி அந்தஸ்து கிடைக்கத் தொடங்கியதுமே அதுவரை தங்களுக்குப் பலமாக சகல விஷயங்களுக்கும் பாலமாக இருந்த உறவுக் கூட்டத்தைப் புறக்கணித்து விடுகிறார்கள்.

பிரிக்க முடியாத பந்தங்கள் என்று சொல்லப்படும் இந்த உறவுகளை பிரிப்பதில் பணம் தான் முதலிடம் வகிக்கிறது. பணம் வந்ததும் சமூகத்தில்வாழும் பெரிய மனிதர்களுடனான இன்னொரு உலகம் இவர்களுக்குத் தெரிகிறது. உறவுக் கூட்டம் எல்லாம் அதன் பிறகு சாதாரணமாக தெரிகிறது.

இந்த மாதிரி வசதி வாய்ப்பு என்று வந்த பிறகு அவர்களின் நடுத்தர மற்றும் வறுமைக் கோட்டுக்கு கீழான நிலையில் உள்ளவர்கள் உறவு என சொல்லிக்கொண்டு இவர்கள் இருக்கும் பங்காள கேட்டைக் கூட நெருங் முடியாது. பாதுகாவலன் பாய்ந்து அப்புறப்படுத்தி விடுவான்.

இந்தத் திடீர் பணக்காரர் கஷ்டப்பட்ட நேரத்தில் இந்த உறவுக்காரர் எவ்வளவோ நேரங்களில் ஓசைப் படாமல் உதவியிருப்பார். அப்போதெல்லாம் இவர்கள் காலில் விழாக் குறையாக ஜென்ம ஜென்மத்துக்கும் இந்த உதவியை மறக்கமாட்டேன் என்று சொல்லிநெகிழ்ந்து இருப்பார்கள். ஆனால் இப்போது திடீர் வசதி வாய்ப்பு பகட்டு வாழ்க்கை தரும் சந்தோஷத் திக்குமுக்காடலில் அப்படியான உறவுகள் இவர்களுக்கு ஒரு பொருட்டாகவே தெரிவதில்லை.

வளர்க்கப்படும் விதம்தான் ஒருவரை அவரது வாழ்க்கை முறையின் போது அடையாளம் காட்டுகிறது. நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்த பலரின் ஏக்கமும் பண்காகர வாழ்க்கையினை விரும்பும் ஏக்கமாகத்தான் இருக்கும். இதனால் மனதளவில் தங்களை ஒரு பணக்காரர் போலவே இவர்கள் காட்டிக்கொள்வார்கள். இந்தப் போலியான வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருப்பவர்கள் நிஜமாகவே பணம் வரத் தொடங்கும்போது ஒரிஜினல் பணக்காரர்களை விடவும் மேலாக நடந்துகொள்கிறார்கள். இந்நிலையில் கீழ்நிலையில் இருக்கும் தங்கள் உறவுக் கூட்டங்களை இவர்கள் எப்படி மதிப்பார்கள்? யார் நீங்கள் என அவர்களைப் பார்த்து இவர்கள் கேட்காமல் இருந்தாலே அதிசயம்.

இன்னொரு வகையினர் இருக்கிறார்கள். பிறந்தது ஏழைக் குடும்பமாக இருந்தாலும் பணக்காரனாகி விட வேண்டும் என்பதே இவர்கள் விடும் மூச்சாக இருக்கும்.

நல்லதோ கெட்டதோ ஒரு சிந்தனை சிறு வயது முதலே மனதுக்குள் அழுத்தமாக பதிந்து போனால் பின்னாளில் அதே நிலையை அவர்கள் எட்டும் வாய்ப்புக்கள் அதிகம். இதென்ன உளவியல் கணக்கு என்பது பலருக்கும் இன்றைக்கு வரைக்கும் புதிர்தான். ஆனால் மனதில் அழுத்தப் பதிந்த அந்தச் சிந்தனை ஆசையாக உருமாறி நிஜமாகவே நிறைவேறி விடுவதற்கு பின்னணியில் நிச்சயம் கடுமையான போராட்டங்களும் தூங்காத இரவுகளும் இருக்கும் என்பது நிச்சயம்.

கிராமத்தில் வறுமைக்குள் உழன்ற ஒருவர் திடீர் பணக்காரர் ஆனார். நகரம் சென்று பணம் பங்களா, கார் என்று வசந்த வாழ்க்கை வாழ்ந்தார். கிராமத்தில் இருந்த தன் ஏழைத்தாயை மட்டும் மனைவி சொல் கேட்டு ஏழையாகவே வைத்திருந்தார்.

ஒருநாள் அந்த ஏழைத்தாய் செத்துப் போனார். கிராமமே கூடி அடக்கம் செய்தது. நான்கு நாள் தான் விஷயம் பணக்காரனை எட்டியது. அம்மா வாயிற்றே. கடைசியில் கூட முகத்தைப் பார்க்க முடியாத சோகம் அழுத்தியது. அம்மாவின் கல்லறையிலாவது முகம் புதைத்துக் கண்ணீருடன் மன்னிப்புக் கோர ஓடி வந்தார். ஆனால் அன்னையின் கல்லறை எது என்று அவருக்குச் சொல்ல ஊரில் ஒருவர் கூட தயாராயில்லை. பணம் வந்த பிறகு உறவுகளைக் கிள்ளுக் கீரையாக வைத்திருந்தார் என்பதே இந்தப் புறக்கணிப்புக்குக் காரணம்.

அன்றைக்குத் திருந்தினார் அவர். பணத்தையும் மீறியது மனிதநேயமும், உறவுகளின் பிணைப்பும் என்பதைத் தெரிந்துகொண்டார். அதற்கு அம்மாவின் உயிரை விலையாகக் கொடுக்க வேண்டியிருந்தது.

உறவுகள் தான் பணத்தையும் தாண்டி கடைசி வரை துணை வரும் என்பதற்கு ஒவ்வொரு முறையும் அனுபவத்தையா பாடமாக எடுத்துக் கொண்டிருக்க முடியும்?

## சமையலறைக் குறிப்புகள்

- குழம்பில் உப்பு அதிகமாகி விட்டால் சிறிதளவு அரிசிப் பொடியைச் சேருங்கள். உப்புச் சுவை குறைந்து விடும்.
- தோசை மிருதுவாக வரவேண்டுமா...? தோசைக்கு மாவு அரைக்கும் போது கொஞ்சம் சோறு அதில் சேருங்கள். தோசை மிருதுவாக இருக்கும்.
- தயிர் புளித்துப்போனால் அதில் 4 டம்ளர் தண்ணீர் ஊற்றுங்கள். பின்னர் அரை மணி நேரம் கழித்துமேலே நிற்கும் தண்ணீரை மட்டும் கீழே ஊற்றி விடுங்கள். இப்போது தயிர் புளிக்காது.
- உருளைக்கிழங்கை வேகவைக்கும் முன்பாக தண்ணீரில் சிறிதளவு வினாகிரியைச் சேருங்கள். உருளைக்கிழங்கு விரைவாக வெந்துவிடும்.

## சமைத்துச் சுவைப்போம்

### கீரை சூப்

**தேவையான பொருட்கள்:-**



| | |
|---|---|
| கீரை | – ஒரு கப் |
| வெண்ணை | – ஒரு மேசைக் கரண்டி |
| கோதுமை மா | – 2 மேசைக் கரண்டி |
| பால் | – ஒரு கபப் |
| உப்பு | – தேவைக்கேற்ப |
| மிளகுதூள் | – தேவைக்கேற்ப |

**செய்முறை :-**

கீரையை நன்றாக வேக வைத்து மசித்துக் கொள்ளுங்கள்.

வாணலியை சூடாக்கி அதில் வெண்ணையையும், மாவையும் சேர்த்து நன்றாகக் கிளறுங்கள். நிறம் மாறாமல் மா வேகும் போது அதனை இறக்கி வைத்து, பாலை ஊற்றி கட்டி பிடிக்காத் அளவுக்கு நான்றாக கலக்குங்கள்.

நான்கு கப் கொதிநீரில் பால் கலவையைக் கொட்டி கலக்கிவிட்டு அதில் கீரையைச் சேருங்கள். இவை அனைத்தும் சேர்ந்து லேசாக கொதித்தவுடன் அதில் உப்பும் மிளகுத்தூளும் கலந்து சூட்டோடு பருகுங்கள்.

# இன்னும் இருவாரங்களுக்குள் பாராளுமன்றம் கலைப்பு

## கொழும்பு ஊடகங்கள் தகவல்

(கொழும்பு)

பாராளுமன்றத்தை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எதிர்வரும் இருவாரங்களில் கலைத்துவிடுவார் என்ற ஊகம் மீண்டும் கொழும்பு ஊடகங்களில் வெளியாகியுள்ளன.

அவ் ஊடகச் செய்தியின் விபரம் வருமாறு, ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் நவம்பர் 17ஆம் திகதிக்கு முன்னதாகவே பாராளுமன்றத் தேர்தல் நடாத்தப்படும். மஹிந்தவின் தேர்தல் ஒப்பந்தங்களையடுத்தே சந்திரிகா குமாரதுங்க இம்முடிவை மேற்கொண்டுள்ளார்.

பாராளுமன்றத் தேர்தலில் சந்திரிகாவின் சுதந்திரக்கட்சி தனித்தே போட்டியிடும். வேட்பாளர்களை சந்திரிகா தலைமையிலான குழு முடிவுசெய்யும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஜே.வி.பி கைப்பற்றிக்கொள்ள வாய்ப்புக்கள் உள்ளன. ஐ.தே.கவின் ஒடுக்குமுறைகளை மீறி 17 ஆண்டு காலமாக சுதந்திரக் கட்சியை சிறிமாவே கட்டிக்காத்து வந்தார். அதைத் தற்போது சந்திரிகா கைவிடக்கூடாது என்று அவரது நண்பர்கள் வலியுறுத்துகின்றனர்.

ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த வென்றுவிட்டால் சுதந்திரக்கட்சியில் பண்டாரநாயக்கர்களுக்கு இடம் இல்லாமல் போய்விடும். கட்சியில் தமது குடும்ப ஆதிக்கத்தை நிலை நிறுத்திக் கொள்ள பாராளுமன்றத் தேர்தலை முன்கூட்டியே நடாத்துவதுதான் சரியான வழி என்றும் அவர்கள் சந்திரிகாவுக்கு ஆலோசனை வழங்கியுள்ளனர் என அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-4)

# வருடாந்த ஸ்கிறபிள் சுற்றுப்போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண இந்துக்கல்லூரி ஸ்கிறபிள் (**Scrabble**)கழகம் ஸ்ரீலங்கா ஸ்கிறபிள் லீக் உடன் இணைந்து நடாத்திய யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான இரண்டாவது வருடாந்த ஸ்கிறபிள் சுற்றுப்போட்டி கடந்த 17ஆம் திகதி யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

இப் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியைச் சேர்ந்த மாணவர்களான வி.மயூரன் இரண்டாவது தடவையாக யாழ்.மாவட்ட பாடசாலைகளின் சிறந்த ஸ்கிறபிள் வீரர் விருதினையும், அ.அல்பேட் நிமலன் மேற்பிரிவில் முதலாம் இடத்தினையும், க.விக்னன் இரண்டாம் இடத்தினையும் பெற்றனர்.

கீழ்ப்பிரிவில் யாழ்.இந்துக் கல்லூரியைச் சேர்ந்த பா.சேதரன் முதலாம் இடத்தினையும், வேம்படி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த ஆர். கௌசா இரண்டாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டனர்.

பங்குபற்றிய பாடசாலைகளின் சிறந்த ஸ்கிறபிள் வீரர்களாக ஜே.ரி.கரன்சாந்தரூபன் (பத்திரிசியார் கல்லூரி), ஜி.விஸ்ணுபிரியா (யாழ்ப்பாணக் கல்லூரி), ஏ.நிதர்சன் (கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி), யு.சுகிர்தா (விக்டோரியாக் கல்லூரி) மற்றும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியைச் சேர்ந்த எஸ். யானுயா ஆகியோர் தெரிவாகினர்.

யாழ்.இந்துக்கல்லூரியின் அதிபர் அ.சிறிகுமரன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம நடுவராக ஸ்ரீலங்கா ஸ்கிறபிள் லீக்கின் தலைவரும் சத்திரசிகிச்சை நிபுணருமாகிய எல்.எம்.அமரசிங்கவும் சுற்றுப்போட்டி ஒருங்கிணைப்பாளராக சி.அன்ரன் ஜெயராக்கும் கடமையாற்றினர்.

அன்றைய தினம் யாழ். இந்துக் கல்லூரியின் ஸ்கிறபிள் கழகத்தின் ஜ.்.வ்னா ஸ்கிறபிளர் (**Jaffna Scrabbler**) என்ற ஈராண்டு இதழின் இரண்டாவது பாகம் நூல் வெளியீடும் இடம் பெற்றது. (த)

# கரவெட்டிப் பகுதியில் பெண்கள் தொகை அதிகரிப்பு

## புள்ளிவிபர கணிப்பீட்டு அறிக்கை அறிவிப்பு

(சாவகச்சேரி)

கரவெட்டி பிரதேச செயலகத்துக்குட்பட்ட முப்பத்தைந்து கிராம அலுவலர் பிரிவு ரீதியான சனத்தொகை புள்ளிவிபர கணிப்பீடுகளிற்கமைய ஆண்களின் தொகையை விட பெண்களின் தொகை 2828 கூடுதலாகக் காணப்படுகின்றது.

கடந்த மே மாதம் 31ஆம் திகதி வரையான கணிப்பீடுகளிற்கமைய இப் பிரதேச எல்லைக்குள் மொத்தம் 13ஆயிரத்து 811குடும்பங்களைச் சேர்ந்த 46ஆயிரத்து பன்னிரண்டு பேர் வசித்து வருகின்றனர்.

இவர்களுள் ஆண்களின் எண்ணிக் கை 21 ஆயிரத்து ஐந்நூற்று தொண்ணூற்று இரண்டாகவும், இத் தொகையிலும் 2ஆயிரத்து இருபத்தெட்டு அதிகரித்த தரவாக, பெண்களின் தொகை 24420 ஆகவும் காணப்படுகின்றது.

இக் கணிப்பீட்டினுள் நலன்புரி நிலையங்களில் வசிக்கும் 59பேரும், வேறு பிரதேச நலன்புரி நிலையங்களில் வசிக்கும் ஆயிரத்து எழுநூற்று இருபத்து மூன்று பேரும் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

சனத்தொகையால் அதிகரித்த கிராம சேவகர் பிரிவாக இமையாணன் மேற்கு **J**/359 இல் எண்ணூற்று எட்டுக் குடும்பங்களைச் சேர்ந்த மூவாயிரம் பேர் காணப்படுகின்றனர்.

பொதுவாக ஏனைய கிராம சேவகர் பிரிவுகளிலும் பெண்களின் தொகையே ஆண்களின் தொகையை விட அதிகரித்துக் காணப்படுகின்றது.

கரணவாய் மேற்கு **J**/349 கிராம சேவகர் பிரிவில் வசிக்கும் 537 குடும்பங்களில் ஆண்களின் எண்ணிக்கை ஆயிரத்து இருபத்தேழாகவும் பெண்களின் எண்ணிக்கை 924ஆகவும் காணப்படுகின்றது.

கரணவாய் மத்தி **J**/362 கிராம அலுவலர் பிரிவில் 366குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 65பேரும், துன்னாலை மத்தி **J**/362 கிராம அலுவலர் பிரிவில் 230 குடும்பங்களைச் சேர்ந்த 665பேரும் காணப்படுகின்றனர்.

சனத்தொகையிலும் குடும்பங்களின் எண்ணிக்கையிலும் குறைந்த கிராம சேவகர் பிரிவான கப்பதூ **J**/382 பிரிவில் 133குடும்பங்களைச் சேர்ந்த 477பேர் வசிக்கின்றனர். (து-21)

# வெளிநாட்டு நாணயங்கள் கைப்பற்றப்பட்டன

சுமார் 20கோடி ரூபா பெறுமதியான வெளிநாட்டு நாணயங்களை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகள் கடந்த வெள்ளிக்கிழமை கைப்பற்றியுள்ளார்கள்.

இந்திய பிரஜை ஒருவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட இந்த நாணயங்கள் சிங்கப்பூருக்கு எடுத்துச் செல்லப்பட இருந்ததாக சுங்கப் பணிப்பாளர் மாலி பியசேன தெரிவித்தார்.


இதுதொடர்பில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபரிடம் கைப்பற்றப்பட்ட வெளிநாட்டு நாணயங்களில் ஸ்ரேலிங் பவுண், யூரோ, அமெரிக்க டொலர், அவுஸ்திரேலிய டொலர் என்பன உள்ளடங்கியிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-9)

# நல்லூரில் நடைபெற்ற தியாக திலீபனின் 18 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகள்










படங்கள்:- ஞா.ஐங்கரன்






## இன்று ஒரு தகவல்

### முட்டை ஓட்டுத் தத்துவம்

"அப்பா! மின்குமிழ் பழுதாகிவிட்டது. வேறு ஒன்று வாங்கிப் போடவேண்டும்" என்றான் மகன். "சரி...போய் புதிதாக ஒன்று வாங்கிக் கொண்டு வா" என்று காசு கொடுத்தார் அப்பா. இவன் ஓடிப்போய் வாங்கிக் கொண்டு வந்தான்.

அப்பாவிடம் கொடுத்தான் அவர் அதை மாட்டிவிட்டார். மகன் அவரைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டான் "அப்பா... இந்த பல்பு ஏன் உடையவில்லை?" என்றான். "இது என்னடா கேள்வி... நாம் கீழே போடவில்லை அதனால் உடையவில்லை" என்றார்.

இது அப்பாவின் புத்திசாலித்தனம் அவ்வளவுதான். ஆனால் மகன் கேட்டது அந்த அர்த்தத்தில் இல்லை. ஒரு மின்குமிழின் கண்ணாடியின் கனம் எவ்வளவு? அரை மில்லி மீற்றர் கனம்தான் இருக்கும்.

அவ்வளவு மெலிதாக இருக்கும் ஒரு கண்ணாடிக் குமிழை ஹோல்டரில் மாட்டும் போது நமது விரலால் அழுத்திப் பிடித்திருக்க வேண்டியிருக்கும். அப்படிச் செய்யும்போது அது உடைவதில்லை. நம்து விரலின் அழுத்தத்தை தாங்கி நிற்கும் அளவுக்கு அதற்குப் பலம் எங்கிருந்து வந்தது.

இதுதான் பையன் கேட்ட கேள்வியின் அர்த்தம். இந்தக் காலத்துப் பிள்ளைகளுக்கு விஞ்ஞான அறிவு அதிகம் அதனால் இப்படியெல்லாம் கேள்வி கேட்டார்கள்.

அப்பாவுக்குத் தெரியுமா? இல்லையா? என்று பார்ப்பதற்காக! இந்த மாதிரி சோதனைக்கெல்லாம் இந்தக் காலத்து அப்பாக்கள் தயாராக இருக்கவேண்டும். இல்லாவிட்டால் மகன் அலட்சியமாக நினைத்துவிடுவான்.

மின்குமிழின் கண்ணாடி மெல்லிதாக இருந்தாலும் நாம் அழுத்திப் பிடிக்கும்போது அது உடையாமல் இருப்பதற்குக் காரணம்.நாம் இயற்கையின் ஒரு தத்துவத்தை அதில் பயன்படுத்தியிருக்கிறோம். அது என்ன இயற்கையின் தத்துவம்? அதுதான்.'முட்டை ஓட்டுத் தத்துவம்' இது இயற்கை உருவாக்கிய ஒரு தத்துவம்.

ஆதிகாலத்திலேயே இயற்கை இந்த தத்துவத்தை உருவாக்கிவிட்டது. அதாவது பறவைகளின் முட்டை ஓடு எப்படி இருக்கிறது? அதன் கனம் எவ்வளவு இருக்கும்? மின்குமிழ் மாதிரித்தானே... மீகவும் மெல்லியதாகத்தான் இருக்கிறது.

பறவைகள் இன விருத்திக்காக முட்டையிட வேண்டும்! அந்த முட்டை எப்படி இருக்க வேண்டும்? இயற்கை கொஞ்சம் யோசித்துப் பார்த்தது.

முட்டை ஓடு மிகவும் கனமாக- தடிப்பாக இருந்தால் உள்ளே வளரும் குஞ்சு அதை உடைத்துக்கொண்டு வெளியே வர முடியாமல் போய்விடும்.

அதே நேரத்தில் அது மிகவும் மெல்லியதாக இருந்தால் தாய்ப் பறவைகள் அதன் மீது உட்கார்ந்து அடைகாக்கும் போது உடல் எடை தாங்க முடியாமல் முட்டைகள் உடைந்து போய்விடும். என்ன செய்வது? முட்டை பலமாகவும் இருக்க வேண்டும். பலமில்லாமலும் இருக்கவேண்டும். குஞ்சு அதை உடைத்துக்கொண்டு வெளியே வரவேண்டும். தாயால் அது உடையக் கூடாது.

ஒரேநேரத்தில் உறுதியாகவும் உறுதியில்லாமலும் முட்டை ஓடு அமைய வேண்டும் என்றால் அது எப்படி சாத்தியம்? இது கொஞ்சம் குழப்பமாகவும் நமக்குப் புரியாத மாதிரியும் இருக்கிறதல்லவா?

அதனால்தான் இதைத் தத்துவம் என்ற சொல்கிறோம். முட்டை ஓட்டுத் தத்துவம் இயற்கை கண்டுபிடித்த ஒரு அபூர்வமான அமைப்பு. அதுதான் முட்டை வடிவம். இது தாய்ப் பறவை சுலபமாக முட்டை இடுவதற்கு ஏற்ற வடிவம். முட்டை சதுர வடிவமாக இருந்தால்.அது வெளிவருவது எவ்வளவு கஷ்டம்? இதன் மீது செலுத்தப்படும் அழுத்தம் நான்கு பக்கமும் பரவிவிடுகிறது.

அதனால் அந்த அழுத்தத்திற்குப் பலம் குறைந்துவிடுகிறது. அதாவது அழுத்தம் வலுவிழந்து விடுகிறது. ஒரு குறிப்பிட்ட சிறு பரப்பில் அளவுக்கு அதிகமான விசை செலுத்தப்படுவதில்லை. அதனால் முட்டையின் வடிவம்தான் அந்த உறுதிக்குக் காரணம்.

இது எப்பேர்ப்பட்ட தத்துவம். இதைத்தான் மின்குமிழ் செய்யும்போது நாம் உபயோகப்படுத்தியிருக்கிறோம்.

ஒரு ஆசிரியர் வகுப்பில் மாணவர்களைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டார். "கோழி முட்டை இடுமா? முட்டை போடுமா?" என்று கேட்டார்.

ஒரு மாணவன் எழுந்து நின்று பதில் சொன்னான்."கோழி முட்டை இடும் சார்! முட்டை போடாது" என்றான். "ஏன் போடாது?"என்றார் ஆசிரியர். "போட்டால் உடைந்து விடும் சார்"என்றான் மாணவன்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

---

## தேர்தலில் வெற்றி பெற்ற பின்

# சமஷ்டிமுறை தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவுள்ளாராம் ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றதும் சமஷ்டி அடிப்படையில் தீர்வு காண்பதற்கான பேச்சுக்கள் ஆரம்பமாகும் என எதிர்க்கட்சித் தலைவரும், ஜனாதிபதி வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஒற்றையாட்சி முறையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது. சமஷ்டி அடிப்படையிலேயே இதற்குத் தீர்வு காணமுடியும். அத்துடன் விடுதலைப் புலிகளும் இதற்குத் தயாராக இருக்கின்றனர் என பதவியாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்,

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றதும் சமஷ்டி அடிப்படையில் தீர்வைக் காண்பதற்கான பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படும். ஐக்கிய இலங்கைக்குள் பேச்சு மூலமான தீர்வு வேண்டுமாயின் மக்கள் எமக்கு வாக்களிக்கட்டும். யுத்தம் மூலம் நாடு பிளவுபட வேண்டுமானால் பிரதமர் மஹிந்தவுக்கு வாக்களிக்கட்டும்.

இதனை தென்னிலங்கை மக்களே தீர்மானிக்க வேண்டும். ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துமாறு ஜே.வி.பிக்கு அழைப்பு விடுக்கவுள்ளோம்.

சமாதான செயற்பாடுகளில் ஜே.வி.பியின் நிலைப்பாட்டினை ஏற்றுக்கொள்ளக் கூடிய நிலைக்கு தமிழீழ விடுதலைப் புலிகளை கொண்டுவர அவர்களால் முடியுமானால் அதற்கு ஆதரவு வழங்குவோம்.

பேச்சுவார்த்தை மேசையில் அமர்ந்த பின்னர் நாட்டின் ஒருமைப்பாடு, பிரிவினை ஆகியன தொடர்பாக அவர்களின் நிலைப்பாட்டினைத் தெளிவுபடுத்துமாறு ஜே.வி.பியினரைக் கோரவுள்ளேன்.

பேச்சுவார்த்தைக்கு வருகை தந்து ஜே.வி.பியினர் தமிழீழ விடுதலைப் புலிகளை அவர்களது நிலைப்பாட்டுக்கு உடன்படச் செய்தால் அதற்கு எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்கமாட்டோம் எனத் தெரிவித்தார். (த-4)

---

# மின் இயக்கிகள் பழுதானமையால் சுழற்சி முறையில் மின் விநியோகம்

(பருத்தித்துறை)

காங்கேசன்துறையில் கூல்எயர் நிறுவனத்தின் மின் இயக்கிகள் இரண்டு பழுதடைந்துள்ளமையால் வடமராட்சி, சுன்னாகம் பகுதிகளுக்கான மின்விநியோகம் இரவு ஒன்றரை மணித்தியாலங்கள் சுழற்சி முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

தற்போது இப் பகுதிகளுக்கான மின்விநியோகம் இரவு 7மணிமுதல் 8.30மணிவரை சுழற்சி முறையில் வழங்கப்பட்டு வருகின்றது.

வடமராட்சிப் பிரதேசம் 5பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு அப்பகுதிகளில் இச்சுழற்சி முறை மின்விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இம் மின் விநியோகத் திட்டத்திற்கமைய உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை, கெருடாவில் பிரிவுகளுக்கு முதலாம் நாளும் நவிண்டில், திக்கம் பிரிவுகளுக்கு இரண்டாம் நாளும் மந்திகை, கற்கோவளம் பிரிவுகளுக்கு மூன்றாம் நாளும் நெல்லியடி, வதிரி பிரிவுகளுக்கு நான்காம் நாளும் பருத்தித்துறை, கரணவாய்ப் பிரிவுகளுக்கு ஐந்தாம் நாளும் இச் சுழற்சி முறை மின்விநியோகம் நடைபெற்று வருகின்றன.

இலங்கை மின்சாரசபை மின் அத்தியட்சகர் எஸ். இராமலிங்கமூர்த்தி இது தொடர்பில் தெரிவிக்கையில்,

பழுதடைந்த மின் இயக்கிகளைத் திருத்துவதற்கான அவசர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் திருத்தப்பட்டதும் பாவனையாளர்களுக்கு ஒழுங்கான மின்விநியோகம் வழங்கப்படுமென்றும் குறிப்பிட்டார். (ரு-52)

---

# இருவேறு நிலைப்பாட்டிலுள்ள மஹிந்த —எப்படி நாட்டை முன்னேற்றுவார்?—

## வினாவெழுப்புகிறது ஐ.தே.க

(கொழும்பு)

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தான் ஒரு குறிக்கோள் அற்ற வேட்பாளர் என்பதை அகில உலகத்திற்கு வெளிக்காட்டியுள்ளார் என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

பரஸ்பர விரோதமான ஒப்பந்தங்களில் கைச்சாத்திடும் நபராக பிரதமர் மாறியிருக்கிறார் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபய குணவர்த்தன விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறான நிபந்தனைகள் அடங்கிய ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுவதன் மூலம் எப்படியாவது ஜனாதிபதியாக வேண்டும் என்பதே பிரதமரின் குறிக்கோளாகும் .

வெற்றிபெற்றால் மக்களுக்கு என்ன வேலைத் திட்டங்கள் செய்யப்படும் என்பது குறித்து எந்தவிதமான கருத்துக்களையும் பிரதமர் இதுவரை தெரிவிக்கவில்லை. 6 வருடங்களுக்குப் பின்னர் ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்பட வேண்டும் என்கின்ற ஜே.வி.பியின் நிபந்தனைகளுக்கு இணங்கியுள்ள மஹிந்த ராஜபக்ஷ நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையில் சில மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும் என்கின்ற ஜாதிக ஹெல உறுமயவின் நிபந்தனைக்கும் இணங்கியுள்ளார்.

இந்த் இரண்டையுமே அவரால் நிறைவேற்ற முடியாது. இவ்வாறான இரு வேறு நிலைப்பாடுகளிலுள்ள பிரதமர் நாட்டை எப்படி முன்னேற்றுவார் என்றும் வஜிர அபய குணவர்த்தன வெளியிட்ட அறிக்கையில் மேலும் கேள்வியெழுப்பப்பட்டுள்ளது. (ரு-4)

---

# மஹிந்த தேர்தலில் வெற்றி பெற்றதும் விடுதலைப் புலிகளுடன் நேரில் பேசுவார்

## நீதியமைச்சர் சண்டே லீடருக்குப் பேட்டி

தேசிய இனப்பிரச்சினையை சமஷ்டி அரசமைப்பொன்றின் மூலம் தீர்ப்பதையே சுதந்திரக்கட்சி ஏற்றுக்கொண்டிருக்கிறது. கட்சியின் ஜனாதிபதி வேட்பாளருக்கு இது நன்கு தெரியும். தேர்தலில் வெற்றி பெறுவதற்கு மக்களின் வாக்குகள் தேவை. அதனையே மஹிந்த ராஜபக்ஷ செய்கிறார். அவர் வாக்குகளை சேகரிப்பதில் ஈடுபட்டிருக்கிறார். தேசிய நெருக்கடியை தீர்க்கும் நேரம் வரும்போது மஹிந்தவின் அருகே நன்கு பழக்கபட்டுவிட்ட ஜே.வி.பி அவருக்கு உதவியாக நிற்கும் என நீதியமைச்சர் ஜோன் செனவிரத்ன 'சண்டே லீடர்' பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியொன்றில் கூறியுள்ளார்.

கடந்த பொதுத் தேர்தலில் சுதந்திரக் கூட்டணிக்கு 45.5வீத வாக்குகள் கிடைத்தன. இன்றைய நிலையில் ஜே.வி.பி ஒரு வேட்பாளரை நிறுத்துமாயின் மஹிந்த வெற்றிபெற முடியாது. ஜே.வி.பியிடம் ஏழு சதவீத வாக்குகள் உள்ளன. இந்நிலையில் ஜே.வி.பியின் வாக்குகளைப் பெறவேண்டியது முக்கியம். ஒற்றையாட்சியின் கீழ்தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணப்படும் என்று அவர் ஜே.வி.பியுடனும் ஹெல உறுமயவுடனும் செய்துகொண்டுள்ள ஒப்பந்தம் இப்பொழுது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது என நினைக்கிறேன்.

ஆயினும், மஹிந்த சுதந்திரக் கட்சியின் கொள்கைகளில் ஊறியவர். கட்சி யின் கொள்கைகளிலிருந்து தான் வேறுபட்டு செயற்படப் போவதாக எவ்விடத்திலும் அவர் கூறவில்லையே அவர் ஜனாதிபதியாகி விடுதலைப்புலிகளுடன் நேரடி யாக பேசுவதற்கு செல்லும் போது ஜே.வி.பியினர் அவரது வலது கரமாக நிற்பர். மஹிந்த ஒரு நடைமுறை அரசியல்வாதி. இன்றைய பிரச்சினையை ஒற்றையாட்சியின் கீழ் தீர்க்க முடியாதென்பது அவருக்குத் தெரியும்.

எனக்கு தெரிந்தவகையில், மஹிந்த தேர்தலை வெற்றி கொள்வதிலேயே கருத்தாக இருக்கிறார். வெற்றிபெற்றதன் பின் ஜே.வி.பி மற்றும் ஹெல உறுமயவுடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தங்களின்படி இனப்பிரச்சினையை ஒற்றையாட்சி முறைக்குள் வைத்துத் தீர்ப்பதற்கு முயற்சிப்பார். பிரபாகரனை நேரில் சந்திப்பதற்கு தயங்கமாட்டேன் என்று வெளிப்படையாக கூறியவரல்லவா. 'ஒற்றையாட்சிக்குள் இனப்பிரச்சினையைத் தீர்ப்பாராயின் அது மிகவும் நல்லதே.

அவ்வாறு செய்யமுடியாத நிலை வருமாயின் அதற்கு மாற்றுவழியான சமஷ்டி முறையை தேர்ந்தெடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கு ஏற்படும்.

ஜனாதிபதி குமாரதுங்க மிகவும் கவலையடைந்தவராக உள்ளார் என்பதை நாம் அறிவோம். இரண்டு கட்சிகளுடனும் பிரதமர் ஒப்பந்தங்களை செய்ததனால் கட்சியிலும் தடுமாற்ற நிலை தோன்றியுள்ளது.

ஆயினும் எந்த ஒரு கட்சியுறுப்பினருக்கும், கட்சிக்கும் பாதிப்பற்ற வகையில் ஜனாதிபதி இந்த விவகாரத்தைத் தீர்த்து வைப்பார் என்று நம்புகிறேன் என ஜோன் செனவிரத்ன தனது செவ்வியில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (து-6)

இன்பம் விழையான் இடும்பை இயல்புஎன்பான்
துன்பம் உறுதல் இலன் - குறள்

வலம்புரி

# ஜனாதிபதித் தேர்தலில் வலுப்பெறும் நிபந்தனைகள்

ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டதை அடுத்து தென்பகுதியில் தேர்தல் களம் சூடு பிடித்துள்ளது.

ஜே.வி.பி., ஜாதிக ஹெலஉறுமய இரண்டும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளிக்க உடன்பட்டுள்ளன.

மிக மோசமான பேரினவாதக்கட்சிகள் என இனங்காணப்பட்ட இரண்டும் மகிந்தவுக்கு ஆதரவளிக்க-

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸினதும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸினதும் ஆதரவு மகிந்தவுக்கா அல்லது ரணிலுக்கா என்ற கேள்வி எழுந்துள்ளது.

ஏற்கனவே ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய கட்சிகளின் நிபந்தனைகளுக்கு அடிபணிந்த மகிந்தவுக்கு, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆகியவற்றின் நிபந்தனைகளுக்கு இணங்குவதில் எந்தத் தடையும் இருக்க முடியாது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசைப் பொறுத்தவரை பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கையில் அந்தக்கட்சிக்கு உடன்பாடு இல்லை.

இந்நிலையில் பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கையை ரத்துச்செய்வதற்கு உடன்பட்ட பிரதமர் மகிந்தராஜ பக்ஸவுடன் கூட்டுச் சேர்வதே தனக்கு இலாபம் என அக்கட்சியினர் முடிபு செய்யலாம்.

அதேவேளை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்கும் பிரதமர் மகிந்தவுக்கும் இடையே நல்லுறவு இல்லாததால் ஜனாதிபதி சந்திரிகாவுடன் காழ்ப்புணர்வு கொண்டுள்ள சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் மகிந்தவுக்கு அதரவளிக்க முன்வரலாம்.

எனினும் யாருக்கு ஆதரவளிப்பதாயினும் சமாதான முயற்சிகளின்போது முஸ்லிம்கள் மூன்றாம் தரப்பாக பேச்சுக்களில் கலந்துகொள்ள இடம் தரவேண்டுமென்ற கோரிக்கையை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முன்வைக்கப்போவதென்பது உறுதி.

ஏற்கனவே ஐக்கிய தேசியக்கட்சி அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே சமாதானப் பேச்சுக்கள் நடந்தபோதும் முஸ்லிம்களுக்கு மூன்றாம் தரப்பு அந்தஸ்து வழங்கப்படவேண்டுமென்ற கோரிக்கையை ரவூப் ஹக்கீம் முன்வைத்திருந்தார்.

இதற்கு விடுதலைப்புலிகள், அரசு, நோர்வே ஆகியன முத்தரப்பும் உடன்படவில்லை. இதனால் தமது தரப்பும் சமாதானப் பேச்சுக்களில் கலந்துகொள்வதற்கான சந்தர்ப்பத்தை மிகிந்தவே தருவார் என்ற முடிபையும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எடுப்பதற்கான வாய்ப்புண்டு.

இது ஒருபுறம் இருக்க, இலங்கை தொழிலாளர் காங்கிரசோ மலையக மக்களின் வாழ்வியல் பிரச்சினைகளை முன்வைத்து தனது நிபந்தனைகளை தயாரிக்கவுள்ளது.

இங்குதான் ஆறுமுகம் தொண்டமான் முஸ்லிம் காங்கிரசிற்கு இல்லாத சிக்கலை எதிர்கொள்ளப் போகின்றார். அதாவது தமிழ் மக்களுக்கு எதிரான ஜே.வி.பி., ஹெல உறுமய போன்ற கட்சிகள் ஆதரவளிக்கும் நிலையில் மகிந்த ராஜபக்ஸவுக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆதரவளிப்பது சரியா என்பதே அவர் எதிர்கொள்ளவேண்டிய சிக்கலாகும்.

எதுவாயினும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல்என்பது என்றும் இல்லாதவாறான 'நிபந்தனை ஆதரவுகளை' கொண்டிருக்கப்போகின்றதென்பதே உண்மையாகும்.

# இலங்கையின் இறைமையை ஏற்பவருக்கே நாம் ஒத்துழைப்பினை வழங்கவுள்ளோம்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் முக்கிய இரண்டு கட்சிகளின் வேட்பாளர்கள் தொடர்பாக எமக்கு உறுதியான நெருக்கடிகள் எதுவும் இல்லை என ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

அதன் தலைவர்கள் இருவருடனும் தமக்கு கொள்கை ரீதியான நெருக்கடி மாத்திரமே இருப்பதாக அக் கட்சியின் பாராளுமனறக் குழுத் தலைவர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் இத் தலைவர்கள் இருவர் மீதும் தாம் நம்பிக்கை வைக்கமுடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். களுத்துறையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டமொனறில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

எம்மாலேயே பிரதமரால் ஜனாதிபதி வேட்பாளராக முடிந்தது. தேர்தலில் போட்டியிடும் இந்த இரு தலைவர்களும் அமெரிக்க சார்பு போக்குடையவர்கள். மேற்குலகம் தான் இவர்களுடைய கனவு. எமது நாட்டின் இறைமைக்கு இவர்கள் முரணாக செல்வார்களாயின் நாம் எதிர்ப்புத் தெரிவிப்போம் என இவர்களுக்கு ஏற்கனவே சொல்லிவிட்டோம்.

நாங்கள் ரணில் விக்கிரமசிங்கவுடனோ மஹிந்தவுடனோ கோபிக்கவில்லை. இந்த இரண்டு போ்லும் எவ்வித இணைப்பும் எமக்கு இல்லை. இரண்டு பேர் மீதும் நம்பிக்கையும் இல்லை.

இலங்கையின் இறைமையை ஏற்றுக்கொள்ளும் தரப்பினருக்கு நாம் எமது ஒத்துழைப்பினை வழங்குவோம் எனத் தெரிவித்தார். (த-4)

# ஐ.தே.கவின் ஆட்சிக் காலத்தில் பொதுமக்கள் நன்மை பெறவில்லை

(கொழும்பு)

இலங்கையில் உள்ள ஒவ்வொரு பிரஜையும் தமது சமயத்தை பின்பற்றுவதற்கு கொண்டுள்ள சுதந்திரத்தை உறுதிசெய்யப் போவதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார்.

நேற்று முன்தினம் நாத்தாண்டியாவில் நடந்த மக்கள் கூடடத்தில் உரையாற்றிய போதே. அவர் இதனைத் தெரிவித்தார்.

அனைத்து இன மக்களும் அச்சமும், சந்தேகமும் இன்றி வாழ்வதற்கு வழிஅமைக்க வேண்டும். விடுதலைப் புலிகளுடன பேச்சுவார்த்தை நடாத்தும்போது வடக்கிலும் தெற்கிலும் உளள அனைத்து இன மக்களினதும் உரிமைகளை பேணிப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்த சந்ததிக்கு பிளவுபடாத தேசத்தைக் கையளிக்கும் பொறுப்பும் என்னிடம் இருக்கிறது. ஐக்கிய தேசியக் கட்சி பல வாக்குறுதிகளை அளித்து வருகிறது.

ஆனால் அந்தக் கட்சியின் தலைமையிலான முன்னைய ஆட்சிக் காலத்தில் பொதுமககளுக்கு எதுவித சலுகைகளையும் அளிக்கவில்லை எனப் பிரதமர் தெரிவித்தார்.

தமது அரசாங்கத்தின கீழ் பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கும் திட்டத்தை தொடங்கப் போவதாகவும் அவர் உறதி அளித்தார்.

இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ கருத்துத் தெரிவிக்கையில்,

வெளிநாட்டு பிரிவினைவாத சக்திகளின் கைப்பொம்மையாக செயல்படாத தலைவர் ஒருவர் ஒருவரைத் தெரிவுசெய்யும் பொறுப்பு பொதுமக்களிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார். (த-7)

# தமிழ் மக்களுக்கான தனியரசில் முஸ்லிம்களுக்கு சமஉரிமையுண்டு

(கொழும்பு)

தமிழினம் அடிமைப்பட்ட இனம் என்ற அடிப்படையில் முஸ்லிம்களை இன்மொரு அடிமை இனமாக நடத்த இடமளிக்கபபடமாட்டாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

மறைந்த எம்.எச்.அஷ்ரப்பின் பாராளுமன்ற உரைகளின் தொகுப்பினை வெளியிடும் நிகழ்வு நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம இதனைத் தெரிவித்தார்.

அடிமை விலங்கினை உடைக்கப் பெற்ற இனம் என்ற வகையில் தமிழினம், முஸ்லிம் மக்களுக்கு அடிமை விலங்கினைப் பூட்டமாட்டாது.

தமிழர்களுக்கு கிடைக்கின்ற தனியரசாக இருந்தால் எனன? மாநில சுயாட்சியாக இருந்தால் என்ன? அதில் முஸ்லிம்களுககும் சமபங்கு இருக்கும் என்ற உரிமையை தமிழீழ விடுதலைப புலிகளும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் வழங்குவதாக அவர் குறிப்பிட்டார்.

வடக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டமை தொடர்பில் முன்னரும் பலதடவை மன்னிப்புக் கோரப்பட்டுள்ளது. இவ்வகையில்ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கல்முனை மாநாட்டில் பங்கேறறு உரையாற்றிய தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் தலைவர் சிவசிதம்பரம், முஸ்லிம்கள் வடக்கிற்கு திரும்பும் வகையில் தாமும் யாழ்ப்பாணம் செல்லப் போவதில்லை என்றும் அதன்படி அவர் நடந்துகொண்டமையையும் அவர் சுட்டிக்காட்டினார். (த-4)

# வீடமைப்புக் கடன்களில் மானிய நடைமுறை

(கொழும்பு)

சமுர்த்தி உதவி பெறுவோர் உட்பட குறைந்த வருமானம உடையவர்களுக்கு வீடமைப்புக் கடன்களை வழங்கும் போது மானிய நடைமுறை ஒன்றை செயற்படுத்த தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை தீர்மானித்துள்ளது.

குறைந்த வருமானம் உடையோர் கடன்களைப் பெற்றுக் கொள்ளும் போது பிணையாளிகளைத் தேடிக் கொள்வதில் நிலவும் கஷ்டங்களை நீக்குவதற்காகவே இந்த மானியமுறை நடைமுறைப்படுத்தப்படுவதாக அதிகாரசபையின் தலைவர் பராக்கிரம கருணாரத்ன தெரிவித்தார்.

இதன்படி,சமுர்த்தி உதவி பெறுவோர் மற்றும் குறைந்த வருமானம் பெறுவோர் ஒருவருக்கொருவர் பிணையாளராக இருப்பதற்கான வேலைத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-7)

# ஜனாதிபதித் தேர்தலின் போது
# ஊடக செயற்பாடுகளை கண்காணிக்க அதிகாரியை நியமிப்பது சாத்தியமில்லை

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் வேளையில் தனியார் ஊடகங்களை கண்காணிப்பதற்கென தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவரை நியமிக்குமாறு ஸ்ரீலங்காக சுதந்திரக்கட்சியின் சட்டத்தரணிகள் சங்கம் தேர்தல் ஆணையாளரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சட்டத்தரணி பந்துல வெல்லாவல இதுபற்றி தெரிவிக்கையில், அரசாங்க ஊடகங்களை மாத்திரம் கட்டுப்படுத்துவதனால உண்மை நசுக்கப்பட்டுவிடும்.

அடுத்த மாதம் 7ஆம் திகதி அளவில் தகுதிவாய்ந்த அதிகாரியை இதற்கென நியமிப்பது பெருத்தமானது என்றார்.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தலின் போது ஊடக நடவடிககைகளை கண்காணிக்க தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவரை நியமிப்பது முடியாத செயல் என தேர்தல் ஆணையாளர் தெரிவிததுள்ளார்.

ராஜகிரியவில் உள்ள தேர்தல் செயலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றிய போதே தேர்தல் ஆணையாளர் இதனைத் தெரிவித்தார்.

ஊடகங்களைக் கட்டுப்படுத்துவதற்கு அதிகாரி ஒருவரை நியமிப்பது அரசியல் யாப்பின் 17ஆவது திருத்தத்தின் படி சட்ட விரோதமானது என்றும் ஆணையாளர் தொிவித்தார். (த-7)

# யுத்தத்திற்காக செலவிடும் போது அபிவிருத்தியை அடைவது எவ்வாறு?

(கொழும்பு)

ஒற்றையாட்சிக்குள் சட்டரீதியான அரசாங்கத்தைத் தவிர வேறொரு குழு இராணுவம் ஒன்றை இயக்கமுடியாது என்று பதில் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா தெரிவித்துள்ளார்.

நாட்டைப் பிரிக்காமல் அனைவராலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வொன்றைப் பெறவேண்டுமானால் பேச்சுவார்த்தை நடைமுறை உருவாக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

பேருவளையில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதநதிரக் கட்சியின் அமைப்பாளர்களின் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போது நடைமுறையில் உள்ள யுத்த நிறுத்த உடன்படிக்கையில் சாதகமான விடயங்களைப் போன்று பாதகமான விடயங்களும் காணப்படுகின்றன.

இதன் காரணமாக் யுத்தநிறுத்த உடன்படிக்கையைத் திருத்தியமைப்பதற்கான அவசியம் எற்பட்டுள்ளது. யுத்தத்திற்காக கோடிக் கணக்கான ரூபாவைச் செலவிட்டால் அபிவிருத்தியை எப்படி அடைவது என அவர் கேள்விஎழுப்பினார். (த-4)

# தினசரி தியானம்



## விவேகச் சிந்தனைகள்

பல்வேறு நதிகள், பல்வேறு இடங்களில் தோன்றினாலும் முடிவில் அவை ஒரே கடலில் சென்று சங்கமமாவது போல் பலவிதமான மனப்பான்மை கொண்டவர்கள் பின்பற்றும் வழிமுறைகள் நேரானவையாகவும் குறுகலானவையாகவும் தோற்றம் அளித்தாலும் இறைவா முடிவில் அவை உன்னிடமே அழைத்துச் செல்கின்றன.

சுவாமி விவேகானந்தர்




# இசை-நடனப் பட்டதாரிகளின் போராட்டம் தொடர்கின்றது

(திருநெல்வேலி)

யாழ்.மாவட்ட வேலை வாய்ப்பற்ற இசை மற்றும் நடன டிப்ளோமா பட்டதாரிகள் நேற்று ஐந்தாவது நாளாக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்.கல்வித் திணைக்களத்திற்கு முன்பாக நடத்தப்பட்டு வரும் மறியல் போராட்டத்தில் சுமார் 60 வேலையற்ற பட்டதாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

தங்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்தே இந்த மறியல்போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

தகுதியற்றவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ள போதிலும் தெரிவுப்பரீட்சையில் சித்தியடைந்து நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றிய தங்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட வில்லையென போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

தங்கள் கோரிக்கைகள் தொடர்பாக வடக்கு கிழக்கு மாகாண கல்வியமைச்சிடம் இருந்து உறுதி மொழிகிடைக்கும் வரை போராட்டம் தொடருமென்று இசை நடன டிப்பிளோமாப் பட்டதாரிகள் தெரிவித்தனர். (ச-19,43)

## கைதிகளை...

மினியங்கொடை வீதியில் நேற்றுக்காலை 9.50மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இத்தாக்குதலில் சிறைச்சாலை அதிகாரிகள் மூவரும் ஒரு விளக்க மறியல் கைதியும் பலியாகியதாக சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் ரூபிமருகூட் தெரிவித்தார்.

இச்சம்பவத்தில் காயமடைந்த கைதிகள் கம்பஹா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவர் ஆபத்தான நிலையில் இருப்பதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

சிறைச்சாலை பஸ் வண்டி பயணம் செய்த வீதிக்குக்குறுக்காக டிப்பர் லொறி ஒன்றை நிறுத்தியே துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-9)

# தியாகி திலீபனின் 18ஆம்...

லெப்டினன் கீர்த்தியின் தந்தையார் சிவஸ்ரீ யோகேஸ்வரக்குருக்கள் ஏற்றிவைத்தார். பின்னர் தியாகி திலீபனின் நினைவுக் கல்லிற்கு தேசிய எழுச்சிப் பேரவையின் பொருளாளர் புண்ணிய சிங்கம், யாழ். மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, பத்மினி சிதம்பர நாதன் ஆகியோர் மலர்மாலை அணிவித்தனர்.

தொடர்ந்து திலீபனின் திருவுருவப்படத்திற்கென ஈகச்சுடரினை தென்னிந்திய திருச்சபை அருட்பணி இராசகுமார் அடிகளார் ஏற்றி வைத்துமலர்மாலையும் அணிவித்தார்.

தியாகி திலீபனின் திருவுருவப்படத்திற்கு நூற்றுக்கணக்கான மக்கள் மலர் அஞ்சலி செலுத்தினார்கள்.

இதனைத் தொடர்ந்து நேற்று முழுநாள் அடையாள உண்ணாவிரதம் நடைபெற்றது. இவ் அடையாள உண்ணாவிரதத்தை பாராளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் ஆரம்பித்து வைத்தார்.

இவ் உண்ணாவிரதத்தில் மதகுருமார்கள் உட்பட நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர். பின்னர் நினைவுரைகள் நடைபெற்றன.

### வல்வெட்டித்துறை

வல்வெட்டித்துறையிலும் தியாகி திலீபனது 18ஆவது ஆண்டு நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது. இந்நிகழ்வு தேசிய எழுச்சிப் பேரவையைச் சேர்ந்த செவ்வந்தி நாதன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஈகச்சுடரினை கரவெட்டி கோட்டக்கல்வி அதிகாரி ரி.அம்பலவாணர் ஏற்றிவைத்தார். திருவுருவப்படத்திற்கு யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசன் மலர் மாலை அணிவித்தார். நினைவுரையை தேசிய எழுச்சிப்பேரவையின் செயலாளர் இரா. துரைசத்தியசீலன் ஆகியோர் ஆற்றினார்கள்.

### கிளிநொச்சி

கிளிநொச்சியில் நேற்றுக் காலை 9மணிக்கு முருகன் ஆலய முன்றலில் இருந்து திருவுருவப்படத்தினை மக்கள் தாங்கிய வண்ணம் பிரதான வீதி வழியாகச் சென்று கிளிநொச்சி கரைச்சி பிரதேசசபை வளாகத் தைச் சென்றடைந்தனர்.

அங்கு நிகழ்வுகள் ஆரம்பமாகின. முதன்மைச் சுடரினை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம் ஏற்றினார், ஈகச்சுடரினை கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் ஏற்றினார்.

தொடர்ந்து சிறப்பாக அமைக்கப்பட்ட பந்தலில் தேசியஎழுச்சிப் பேரவையைச் சேர்ந்த எஸ்.சிவபாலன் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன.

### அரசியல்துறை செயலகத்தில்

தமிழீழ அரசியல்துறை நடுவப்பணியகத்தில் திலீபனின் நினைவுகள் நேற்றுக்காலை ஆரம்பமானது. அங்கு முதன்மைச் சுடரினை தமிழீழ அரசியல் நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் மணியண்ணர் ஏற்றி வைத்தார். தமிழீழ தேசியக்கொடியினை தமிழீழ துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றினார்.

திலீபனின் உருவப்படத்திற்கு திட்டமிடல் செயலகத்தைச் சேர்ந்த கீதா சுடரேற்றி மலர் மாலை அணிவித்தார். (ச-19, 43, 8)

## போரை ஆரம்பிக்க...

யுத்தம் என்று வந்தால் அப்போது யார் யுத்தம் செய்வது? அவர் இராணுவத்தை கலைக்குமாறு இலகுவாகக் கூறுகிறார்.

அது இராணுவத்தின் சுயநம்பிக்கையை பாதிக்கும். வடக்கு கிழக்குப் பிரச்சினைக்கு பேச்சுவார்த் மூலம்தான் தீர்வுகாண வேண்டும்.

இயலாது என்றால்தான் யுத்தத்திற்குச் செல்ல வேண்டும். ஆனால் யுத்தத்தால் இதனை தீர்க்க முடியாவிட்டால் என்ன செய்வது?.

யுத்த நிறுத்தத்தை ரத்து செய்தால் யுத்தத்திற்கு தயாராக வேண்டும். இந்த பிரச்சினைக்கு கட்டாயமாக பேச்சுவார்த்தை மூலமே தீர்வுகாணப்பட வேண்டும். அதுபற்றி நான் 15, 20வருடங்களுக்கு முன்னரே கூறியிருக்கிறேன்

இப்போது இலங்கையின் மாவட்டங்களில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் எமக்கில்லை. அம்பாறை, மட்டக்களப்பு யாழ்ப்பாண நகரங்கள் மட்டுமே எம்மிடம் உள்ளன.

ஏனையவை விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளன. அப்படியானதொரு நிலை இருக்கையில் யுத்தத்திற்கு தயாராகுமாறு கூறினால் முடியாது.

ஒருவருடத்திற்கு முன்னர் இராணுவத்தில் இருந்து தப்பியோடியவர்களின் எண்ணிக்கை 60 ஆயிரம். யுத்தம் புரிய படை வீரர்கள் தேவை அதனால் ஹெல உறுமயவின் பிக்குகளும் ஜே.வி.பி.யினரும் காவியை கழற்றி வைத்து விட்டு யுத்தத்திற்குசெல்லுமாறு நான் கௌரவத்துடன் கூறு கிறேன். (ச-8)


# அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபையின் முதலாம் வட்டாரம் வீரபத்திரர் வீதி 7ஆம் நம்பரில் அமைந்துள்ள ஆதனம் எமது தலைமுறை தலைமுறையாக வந்த பரம்பரைச் சொத்து என்பதையும் 20வருடங்களுக்கு மேலாக எனது சொந்த பராமரிப்பில் உள்ளது என்றும் இந்தச் சொத்தை பாதுகாக்கும் நோக்குடன் விசுவலிங்கம் அரியரத்தினம் ஆகிய நான் எனது பெயரில் வெளிப்படுத்தல் உறுதி முடித்து வைத்துள்ளேன் என்றும் இத்தால் தெரியப்படுத்தி இதனால் எவரது உரிமைகள் பாதிக்கப்பட்டிருப்பின் தகுந்த ஆவணங்களுடன் கீழ்க்காணும் விலாசத்துடன் பதிவுத் தபால் மூலம் இன்றிலிருந்து ஒரு மாத காலத்துள் தொடர்பு கொள்ள வேண்டுகின்றேன்.

## ஆதனடாப்பு

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்றிக் நல்லூர் கோவில்பற்று மருவு நிலையிட்ட ஆராச்சி வளவு நிலப்பரப்பு ஒன்றே முக்காலும், கிணறும், கல்வீடும், பயிர் வகைகளும், எல்லை கிழக்கும் தெற்கும் ஒழுங்கை வடக்கு ஞானப்பூங்கோதையின் ஆதனம் தெற்கு கையொழுங்கையும்.

விசுவ. அரியரத்தினம்,
3A நெவில் வீதி,
திருக்கோணாமலை.

(9918)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 25 01 1943



இழப்பு 27 09 2004

## தோழர் வ.சுந்தரம்

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் ஒரு தொழிற் சங்கவாதியாக தனது பொதுவாழ்வை ஆரம்பித்த தோழர் சுந்தரம் அவர்கள் ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டங்களில் பங்கேற்றவர். வலிகாமம் வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து வலி தெற்கில் வாழ்ந்து வந்த அவர் இடப்பெயர்வின் அவலங்களுக்கு நேரடியாக முகம் கொடுத்தவர். இடம் பெயர்ந்த மக்களின் துன்பங்களைப் போக்கி அவர்களுக்கு உதவுவதில் முன்னின்று உழைத்தவர். வலிகாமம் வடக்கு பிரதேசசபை உறுப்பினராக ஐந்து வருடங்கள் பதவி வகித்த அவர் அப்பிரதேசத்தின் புனர்நிர்மாணம், மக்களின் இயல்பு வாழ்க்கை என்பவற்றுக்காக அர்ப்பண உணர்வுடன் செயலாற்றியவர். ஊடகத் துறையிலும் ஈடுபாடு கொண்டிருந்த அவர் பேசவும் ,எழுதவும், கூட்டம் கூடவும் ஒவ்வொருவருக்குமுள்ள சுதந்திரத்தை, அடிப்படை ஜனநாயக உரிமையை வலியுறுத்தி வந்தவர்.

சுந்தரம் ஐயா என எல்லோராலும் அழைக்கப்பட்ட 61வயது இளைஞனாக நம் மத்தியில் வலம் வந்த சமூக அக்கறை கொண்ட அவரது செயற்பாடுகள் துப்பாக்கிக் குண்டுகளால் பலவந்தமாக நிறுத்தப்பட்டு ஆண்டு ஒன்று கடந்திருக்கிறது. யுத்த நிறுத்தம், சமாதான முன்னெடுப்புக்கள் மத்தியில் சுட்டுவீழ்த்தப்பட்ட சமாதானப் புறா அவர்.அன்னாரின் நினைவு நாளில் அவரது சமூகப்பணிகளை கௌரவிக்கும் வகையில் எமது இதய பூர்வமான அஞ்சலியை செலுத்துவோமாக.

**பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எவ்**

(C1680)










இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட். யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.09.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.